பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 10 வியாழக்கிழமை (24.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 59

## இடைக்காலத் தீர்வுத் திட்ட யோசனை நேற்று ஜனாதிபதியிடம் கையளிப்பு!

கொழும்பு, ஜன. 24

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு ஊடாக தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் - அரச ஆதரவுக் கட்சிகளின் - தெரிவுக் குழுவால் தயாரிக்கப்பட்ட இடைக்காலத் தீர்வு திட்ட அறிக்கை நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸவிதாரண தீர்வுத் திட்ட அறிக்கையினை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்த தீர்வுத்திட்ட இடைக்கால அறிக்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஜனநாயக பிரிவு, ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சி கள் ஒப்பமிட்டுள்ளன.

* அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை இயன்றளவு அதிக அளவில் நடைமுறைப்படுத்தல். (10ஆம் பக்கம் பார்க்க)

### ராஜதந்திரிகளுக்கு இன்று விளக்கம்

கொழும்பு,ஜன.24

அனைத்துக் கட்சிகளின் - அரச ஆதரவுக்கட்சிகளின் - தெரிவுக்குழு நேற்று ஜனாதிபதியிடம் கையளித்த இடைக்காலத்தீர்வு யோசனைகள் குறித்து இன்று வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளிக்கப்படும்.

வெளிவிகார அமைச்சு அலுவலகத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் இச்சந்திப்பில் அமைச்சர் ரோஹித போகல்லாகம, (10ஆம் பக்கம் பார்க்க)



கையளிக்கப்பட்ட யோசனையை ஜனாதிபதி ஊன்றிப் படிக்கும் போது....

### ஆயுதக் குழுக்களின் வன்முறை அதிகரித்திருப்பதால்

# கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ்க் கூட்டமைப்பு போட்டியிடாது

கொழும்பு, ஜனவரி 24

கிழக்கில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாது. அங்கு ஆயுதக் குழுக்களின் வன்முறை அதிகரித்திருப்பதால் இத்தேர்தல்களில் போட்டியிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் விவகாரக் குழு நேற்றுக் கூடி இத்தீர்மானத்தை எடுத்தது.

நாடாளுமன்றக்குழு அறையில் நேற்றுப் பிற்பகல் இவ்விடயம் தொடர்பாக நீண்ட நேரம் கலந்தாலோசித்து இறுதியில் இத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அக்குழு தீர்மானித்தது.

இது தொடர்பாகக் கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் கூறிய கருத்துக்கள் வருமாறு:-

நடைபெறவுள்ள கிழக்குத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடுவது பற்றி நாம் கலந்தாலோசித்தோம். மட்டக்களப்பில் நாம் போட்டியிடுவதற்கான சூழல் நூறு வீதம் (10ஆம் பக்கம் பார்க்க)

### அரசு - பிள்ளையான் குழு கூட்டாகப் போட்டியிட முடிவு

மட்டக்களப்பு,ஜன.24

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் பிள்ளையான் தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிட உள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சியும் கிழக்கில் போட்டியிடாது

கொழும்பு,ஜன.24

கிழக்கில் ஆயுதக்குழுக்களின் வன்முறை நடவடிக்கைகள் எல்லை மீறி அதிகரித்திருக்கின்றன என்ற காரணத்தினால் கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணிக்குக் கூடிய கட்சியின் அரசியல் விவகாரக்குழு இது தொடர்பாக 'நீண்ட நேரம் கலந்தாலோசித்து இறுதியில் மேற்படி தீர்மானத்துக்கு வந்தது எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாகக் கட்சியின் பொதுச் (10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் போட்டியிடும் கட்சிகள் ஆயுதங்களைத் துறக்க வேண்டும்

### அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு,ஜன.24

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளும் ஆயுதங்களைக்கீழே வைத்துவிட்டு மக்கள் பிரதிநிதிகளாக வரவேண்டுமே தவிர ஆயுதங்கள் மூலம் வரக்கூடாது.

இப்படி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றோபேட் ஓ பிளேக் தெரிவித்திருக்கிறார்.

நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர் அங்குவைத்து இக்கருத்தினைத் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள (10ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மறைவிடமான 'எக்ஸ் - ரே' தளத்தை துல்லியமாக இலக்குவைத்து விமானக் குண்டுவீச்சு!

### அரசுத் தரப்பு அறிவிப்பால் நேற்றுத் தென்னிலங்கையில் பரபரப்பு

கொழும்பு,ஜன.24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் மறைவிடமான - இரணைமடு, கல்மடுக்குளம் பகுதியில் உள்ள - 'எக்ஸ் - ரே' தளம் மீது இலங்கை விமானப்படையினர் இலக்குத் தவறாத துல்லியமான விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலை நேற்று முற்பகல் 11.15 மணியளவில் நடத்தினர் என விமானப் படையின் பேச்சாளர் விங் கொமாண்டர் அன்ட்ரூ விஜேசூரிய தெரிவித்தார்.

''எக்ஸ் - ரே'த் தளம் என்று அழைக்கப்படும் இந்த முகாமிலேயே பிரபாகரன் மறைந்திருக்கின்றமை வழக்கம் என உளவு வட்டாரங்கள் கூறுகின்றன. அந்தத் தளத்தை காலை 11.15 மணிக்கு நமது விமானங்கள் இலக்கு வைத்தன. தாக்குதல் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது என விமானிகள் உறுதிப்படுத்தினர்.

''பிரபாகரன் இறந்தார் என்று ஊகத்தை வெளிப்படுத்த நான் விரும்பவில்லை. இலக்கு சரியாக வைக்கப்பட்டது என்பதை மட்டும் நான் கூறுவேன்.'' - என்றும் (10ஆம் பக்கம் பார்க்க)

## பொய்யான பரப்புரைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது! - இளந்திரையன்

கிளிநொச்சி,ஜன.24

இலங்கை விமானப் படையினர் நேற்று நடத்திய தாக்குதல் குறித்து வெளியிடப்படும் தகவல்களை மலிவுப் பரப்புரை என்று வர்ணித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் [illegible] ளர் இராசையா இளந்திரையன்.

இந்தத் தகவல்களில் எதுவித உண்மையும் இல்லை என்று அவர் இணையத் தளம் ஒன்றுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முதன்மை முகாம் (10ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கிலி!

கிளிநொச்சி,ஜன. 24

நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியை அண்டிய வான் பரப்பில் பெரும் அதிர்வு அலைகளை எழுப்பியபடி நீண்ட நேரம் வட்டமிட்ட 'கிபிர்' ஜெற் குண்டு வீச்சு விமானங்களால் கிளிநொச்சி நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்காகக் கூடியிருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்புத் தேடி நாலாபுறமும் சிதறி ஓடினர்.

கிளிநொச்சி நகரில் திரண்டிருந்தோரும் விமானங்கள் எங்கு குண்டு வீசப் போகின்றன எனத் தெரியாமல் அல்லோல கல்லோலப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையே கடற்கண்ணிகளை இலங்கை விதைத்தது!

## தமிழக மீனவர்களுக்கு முன்னெச்சரிக்கை அறிவிப்பு

கொழும்பு,ஜன.24

கடற்புலிகளின் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 'கடலடிப் பாதுகாப்பு செயன்முறைத் திட்டத்தை' நடைமுறைப்படுத்தியுள்ள இலங்கைக் கடற்படை, அதன் ஒரு கட்டமாக கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட கடல் பிரதேசத்தில் கடல் கண்ணி வெடிகளையும் விதைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கண்ணிகள் விதைக்கப்பட்டிருப்பதால் சாவதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக கடல் எல்லைக்குள் பிரவேசிப்பது குறித்து இந்திய மீனவாகளுக்குத் தகுந்த எச்சரிக்கை விடுக்கும்படியும் இலங்கைக் கடற்படை இந்தியக் கடற்படையைக் கோரியிருக்கின்றது.

இலங்கைக் கடற்படையிடமிருந்து இது குறித்துத் தகவல் கிடைத்துள்ளதாக இந்தியக் கடற்படையின் தமிழ்நாட்டுக்கான பொறுப்பதிகாரி கொமடோர் பிலிப்வன் ஹல்ட்ரன் தெரிவித்தார்.

இந்தத் தகவல் தமிழ்நாட்டின் சிரேஷ்ட செயலாளா எல்.கே.திரிபாதிக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இந்தக் கடலடிப் பாதுகாப்பு செயற்றிட்டம் குறித்து இராமேஸ்வரம் தொடக்கம் நாகப்பட்டினம் வரையுள்ள - இந்தியாவின் கிழக்குக்கரையோர - கடற்படைத் தளங்கள் அனைத்தும் உஷார்படுத்தப்பட்டிருக்கின்றன.

கடலில் விதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிபொருள்களுடன் தமிழ்நாட்டிலிருந்தோ அல்லது வேறு பகுதிகளிலிருந்தோ வரும் மீனவப் படகுகள் தொடுகையுறும் பட்சத்தில் கடுமையான விளைவுகள் ஏற்படலாம். இதன் காரணமாக இந்தச் செய்தியின் அவசரம் குறித்து கடற்படைப் பொறுப்பாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இலங்கை கடற்படை என்ன நோக்கத்துடன் இதனைச் செய்தது என்பது தெரியாதபோதிலும் இந்தத் தந்திரோபாயம் தமிழ்நாடு மீனவர்களுக்கு எதிரானதல்ல, விடுதலைப் புலிகளுக்கு எதிரானது எனத் தான் கருதுகின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முழுமையான யுத்தம் ஆரம்பித்து விட்டது. இதன் காரணமாக இந்திய மீனவர்களும், படகுகளும் கடல் கண்ணிவெடியில் சிக்கிக் கொள்ளும் அபாயகரமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதைத் தவிர்க்கவேண்டும். - என்றும் ஹல்ட்ரன் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்பகுதி அமைதியாகவுள்ளது. இதன் காரணமாக எமது பகுதியில் பாதிப்பு ஏற்படாது. இலங்கை அரசு தனது பகுதியிலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டுப் பொலிஸார் இதுகுறித்து மீனவர்களுக்கு எச்சரித்துள்ளதாகவும், இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழக மீனவர்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசம் தனது ஆதிக்கத்துக்கு உட்பட்டது என இலங்கை உரிமை கோரி வந்தாலும் அது தங்களது மீனபிடித் தொழிலுக்கான பாரம்பரிய மையம் எனத் தமிழக மீனவர்கள் உரிமை கோரி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களுக்கான விலைகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

'யுனிகுளோறி' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள 71 பொருள்களுக்கான விலைகளை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

கப்பலில் பொருள்களை எடுத்துவந்துள்ள நிறுவனங்கள் அவற்றை தாம் விற்பனை செய்யவுள்ள விலைகளை நிர்ணயித்து அந்த விவரங்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவித்திருந்தன.

நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கே பொருள்களை விற்பனை செய்யுமாறு அரசாங்க அதிபர் வர்த்தகர்களைக் கேட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவுப்பொருள்கள் - 35, கட்டடப் பொருள்கள் - 11, மற்றும் மோட்டார் சைக்கிள்கள், உரம், நீர் இறைக்கும் இயந்திரம் உட்பட 71 பொருள்கள் இக் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன. அவற்றின் விலைகளே அறிவிக்கப்பட்டுள்ளன. (அ-1)

# அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்த சுவிஸுக்கு வற்புறுத்தல்

## அந்நாட்டு அகதிகள் சபை கோரிக்கை

ஜெனிவா,ஜன.24

சுவிட்ஸர்லாந்தில் அரசியல் தஞ்ச கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களை அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு சுவிஸ் அகதிகள் சபை அந்த நாட்டு அரசைக் கேட்டுள்ளது. சுவிஸ் அகதிகள் சபை விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் கோருபவர்களில் அனேகமானவர்கள் மோதல்கள் நடைபெறும் பகுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதைத் துரிதப்படுத்துமாறும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

வன்முறையிலிருந்து தப்புபவர்கள் நிம்மதியாக - பாதுகாப்பாக வாழக்கூடிய இடம் என்று இலங்கையில் எதுவுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ஈழவேந்தனின் இடத்துக்கு இமாம் தேசியப் பட்டியல் எம்.பியாகிறார்

## தமிழ்க் கூட்டமைப்பில் முஸ்லிம் ஒருவருக்கு இடம்

கொழும்பு,ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த ஈழவேந்தன் அப்பதவியை இழந்தமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தமிழ்த் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக முஸ்லிமான சட்டத்தரணி ரஸீன் முகம்மது இமாம் (வயது - 63) நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அவர் எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமனறம் கூடும்போது புதிய நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக் கொள்வார்.

ரஸீன் முகம்மது இமாமை இப் பதவிக்கு நியமிப்பதற்கான கடிதத்தைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா தேர்தல் ஆணையாளருக்கு வழங்கியமையை அடுத்து, அதை ஒட்டிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான சட்டத்தரணி இமாம் 1970களின் இறுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ். மாநகர சபை உறுப்பினராக இருந்தவர்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழரசுக் கட்சியிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அங்கம் வகித்து வந்த அவர் 1990 இல் யாழ். குடாநாட்டிலிருந்து முஸ்லிம்கள் இடம்பெயர்ந்தபோது தாமும் இடம்பெயர்ந்தார். அப்போது முதல் கொழும்பில் தங்கி அவர் சட்டத்தரணியாக தொழில் புரிந்து வருகின்றார்.

2004ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளராக அவரது பெயரும் இடம் பெற்றிருந்தது.

எனினும், தற்போது ஜோசப் பரராஜசிங்கம், சந்திரநேரு, ஈழவேந்தன் ஆகியோரைத் தொடர்ந்து நான்காவது ஆளாக இந்தத் தேசியப் பட்டியல் நியமனத்தை அவர் பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# மூத்தோருக்கு சிறப்பு வைத்தியசேவை மாதத்தில் 1 நாள் அரச ஆஸ்பத்திரிகளில்

குருநகர்,ஜன.24

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் சகல அரசாங்க வைத்தியசாலைகளிலும் மாதத்துக்கு ஒரு தடவை அறுபது வயதுக்கு மேற்பட்ட மூத்தோர்களுக்கான வைத்திய பரிசோதனையை விசேடமாக நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நிறுவனத் தலைவர்கள் பங்குபற்றிய மாதாந்த கலந்துரையாடலிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வைத்தியசாலைகளுக்கு பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக மூத்தோரும் வருகின்றார்கள். அவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை நாம் கருணையுடன் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டியது அவசியமாகும். அவர்களை அன்பாக ஆதரித்து அவர்களது குறை நிறைகளைக் கேட்பதனால் அவர்கள் மிகவும் மனம் மகிழ்வார்கள். அவர்களில் பெரும்பாலானோர் உளத்தாக்கத்தில் வாழ்ந்து வருகிறார்கள். எனவே அவர்களைப் பரிசோதிப்பதற்கென எமது வைத்தியசாலைகளில் மாதத்தில் ஒரு நாள் விசேடமாக ஒதுக்கப்பட வேண்டும். அவர்களது சலம், இரத்த அழுத்தம் ஆகியவற்றை பரிசோதனை செய்து ஏற்ற மருந்துகள் வழங்க பொறுப்பு வைத்திய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கூறினார். (அ-51)

# சரசாலை தெற்கில் நாளை வயல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.24

சரசாலை தெற்கில் விதை நெல் உற்பத்தி, வயல் விழா நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற உள்ளது.

நெற்செய்கையாளர்கள் தரமான விதை நெல்லைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்பட்ட விதை நெல் வெற்றிகரமாக விளைந்த வயலில் இந்த நிகழ்வு இடம் பெறுகின்றது.

பிரதி விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். (1)

# மானிப்பாயில் நாளை விவேகானந்தர் தின விழா

வலி.தென்மேற்கு,ஜன.24

சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினத்தைமுன்னிட்டு, பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சு. ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இன் நிகழ்வுகளில் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படமும் திரை நீக்கம் செய்து வைககப்படும். (1-135)

# நெலுக்குளத்தில் புலி உறுப்பினர் பலி

கொழும்பு,ஜன.24

வவுனியா, நெலுக்குளம் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியவேளை இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இத்தேடுதலின் பின்னர் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது விடுதலைப் புலி உறுப்பினரின் சடலத்தையும், மைக்ரோ பிஸ்டல் ஒன்றையும், தற்கொலை அங்கி ஒன்றையும் இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டுள்ளது. (சி)

## கண்ணீர் அஞ்சலி



தீவகக் கல்வி வலயத்தில் வர்த்தகபாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிவரும் சி.இளங்கீரன் அவர்களின் தாயார்

**திருமதி ஜெயலட்சுமி சிவலிங்கம்**

21.01.2008 அன்று காலமாகிவிட்டார். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தீவக கல்வி வலய உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
தீவக் கல்வி வலயம்.


## உடன் தேவை

ஊர்ச்சேவல்கள், ஊர்க்கோழிக் குஞ்சுகள் உடன்தேவை. தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பான முடிவைப் பெறுவோம்
### லக்ஸ்மன் பேட்டி

அடிலெய்ட், ஜன.24

'அடிலெய்ட்டில் நடைபெறும் நான்காவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு மீண்டும் அதிர்ச்சி அளித்து சிறப்பான முடிவைப் பெறுவோம்.'

இவ்வாறு இந்தியாவின் மத்தியவரிசை வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பேர்த்தில் நடந்த 3ஆவது டெஸ்ட் போட்டியில் லக்ஸ்மனின் 79 ஓட்டங்கள் இந்தியாவின் வெற்றிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

இந்நிலையில் கடைசி டெஸ்ட் போட்டி குறித்து கூறியவை வருமாறு:-

இந்தியாவிலிருந்து புறப்படும்போது தொடரை வென்றாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆஸ்திரேலியா வந்தோம். ஆனால், தற்போதைய சூழலில் அதற்கு வாய்ப்பு இல்லை. அதே சமயம் தொடரை சமன் செய்வதற்கு வாய்ப்புள்ளது. கொல்கத்தாவில் நடந்த போட்டியில் கொடுத்த அடி மாதிரி அடிலெய்ட்டிலும் நடந்தால் மிகவும் சந்தோஷப்படுவேன். அப்போட்டியில் குவித்த 281 ஓட்டங்களை என் வாழ்க்கையில் எப்போதும் மறக்க முடியாது. அதுபோல இங்கும் அற்புதம் நடக்கலாம். ஆஸ்திரேலியாவை அடுத்தடுத்து தோற்கடித்து, தொடரைச் சமன் செய்தால் இந்தியாவுக்கு அது நல்ல முடிவாக இருக்கும்.

பேர்த் போட்டியில் ஆர்.பி.சிங் ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. அவருடன் இணைந்து சேர்த்த ஓட்டங்கள் உண்மையிலேயே குறிப்பிடும்படியானவை. குறிப்பாக, பிரட் லீ வீசிய பந்துகளை அருகிலேயே தள்ளிவிட்டு, மிக விரைவாக ஓடி ஓட்டங்களைச் சேர்த்தார். பேர்த் போட்டியின் வெற்றியில் அவருக்கும் முக்கிய பங்கு உண்டு'' - என்றார் லக்ஸ்மன்.

# அமர்க்களப்படுத்துமா அடிலெய்ட்?

## இந்தியா, ஆஸி. அணிகளிடையே 4ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

எப்படி வீழ்த்துவது?.....



அடிலெய்ட், ஜன.24

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று அடிலெய்ட்டில் ஆரம்பமாகின்றது. கடந்த போட்டிகளைப் போலவே இந்தப் போட்டியும் அமர்க்களப் படுத்துமா என ரசிகர்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதலிரு போட்டிகளிலும் தோல்வியடைந்த இந்தியா, பேர்த்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றது.

இந்நிலையில், 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று அடிலெய்ட்டில் தொடங்குகிறது. பேர்த் தோல்விக்குப் பிறகு இந்தப் போட்டி நடப்பதால் ஆஸ்திரேலிய அணி எப்படி இந்த டெஸ்ட் போட்டியை அணுகும் எனும் கேள்வி எழுந்துள்ளது.

சிட்னி டெஸ்ட் சர்ச்சைக்குப் பின்னர் ஆஸ்திரேலிய வீரர்கள் தங்களது வழக்கமான அணுகுமுறையை கைவிட்டமையாலேயே பேர்த்தில் தோல்வியடைந்ததாகக் கருதப்படுகிறது. இந்நிலையில், அடிலெய்ட் டெஸ்ட்டில் அவர்கள் மீண்டும் ஆவேசமாக விளையாட முற்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

அதேநேரத்தில் இந்திய அணி பேர்த் டெஸ்ட்டில் பெற்ற வெற்றியின் நம்பிக்கையில் அடிலெய்ட்டில் சிறப்பாக ஆடி வெற்றி பெற விரும்புகிறது. இதன் மூலம் தொடரை சமன் செய்ய இந்தியா துடித்துக் கொண்டிருக்கிறது.

அடிலெய்ட் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்றது என்பதால் இந்திய அணியில் ஹர்பஜன் சிங் சேர்க்கப்படலாம் எனத் தெரிகிறது. ஆரம்ப வீரர் வசீம் ஜாபர் நீக்கப்பட்டு ஹர்பஜன் சிங் அணியில் சேர்க்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

கடந்த டெஸ்ட் போட்டியில் இர்பான் பதான் அபாரமாக பந்துவீசியதால் அவரை தொடர்ந்து ஆடச்செய்ய இந்தியா தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக கூடுதலாக பந்துவீச்சாளர்களை இடம்பெற செய்வதா அல்லது கூடுதல் ஆட்டக்காரர்களை அணியில் சேர்ப்பதா என இந்திய அணி தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

வசீம் ஜாபர் நீக்கப்படும் பட்சத்தில் டிராவிட் தொடக்க வீரராக ஆடுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார். அல்லது ஜாபருக்கு பதிலாக தினேஷ் கார்த்திக் சேர்க்கப்பட்டு ஹர்பஜன் சிங் அணியில் இடம்பெறாமல் செய்வது பற்றியும் இந்திய அணி பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

ஆஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரை ஆரம்ப வீரர் மத்தியூ ஹைடன் காயத்திலிருந்து மீண்டு அணிக்குத் திரும்பியுள்ளார். வேகப் பந்துவீச்சாளர் ஷோன் ரெய்ற் நீக்கப்பட்டு சுழற்பந்து வீச்சாளர் பிரட் ஹொக் அணியில் சேர்க்கப்பட உள்ளார்.

## ஹைடன் சவால்

அடிலெய்ட், ஜன.24

அடிலெய்ட்டில் தங்களது திறமையை நிரூபித்துக் காட்டட்டும் என இந்திய வீரர்களுக்குச் சவால் விட்டுள்ளார் ஆஸியின் ஆரம்ப வீரர் மத்தியூ ஹைடன்.

'பேர்த் தோல்வியால் ஏற்பட்ட ஏமாற்றத்தை மறந்துவிட்டோம். அடிலெய்ட் போட்டிக்காக தீவிர பயிற்சி செய்து வருகிறோம். இந்திய அணியின் பந்துவீச்சு பலமானது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அடிலெய்ட் போட்டியில் அவர்கள் தங்கள் திறமையை நிரூபித்துக் காட்டட்டும். இப்போது முழு உடல்தகுதியுடன் உள்ளேன். அடிலெய்ட் டெஸ்ட்டில் நிச்சயமாக் களமிறங்குவேன்.'' - என்றார் ஹைடன்.

காயம் காரணமாக பேர்த் போட்டியில விளையாடாத ஹைடன், இந்தத் தொடரில் 307 ஓட்டங்களை (சராசரி 76.75) குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# என்னைக் கண்டால் ஆஸிக்குப் பயம்!

## பெருமிதமடைகிறார் சிறிசாந்த்



புதுடில்லி, ஜன.24

"நான் யாருக்கும் பயப்படமாட்டேன். ஆஸ்திரேலிய வீரர்கள்தான் என்னைக் கண்டு பயப்படுகிறார்கள்.''

இவ்வாறு இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் சிறிசாந்த் தெரிவித்துள்ளார்.

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுடன் முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்திய அணி பங்கேற்கிறது. காயம் காரணமாக டெஸ்ட் தொடரில் இடம்பெறாத சிறிசாந்த் முத்தரப்பு தொடருக்கான அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார். ஆக்ரோஷத்துக்கு அதிகம் பெயர் பெற்ற இவர் சமீபத்தில் இந்தியாவில் நடந்த ஆஸ்திரேலியாவுடனான ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலியாவின் சைமண்ஸ், பொண்டிங் ஆகியோருடன் உரசிக் கொண்டார். இந்நிலையில் ஆஸ்திரேலிய வீரர்கள் என்னைக் கண்டு பயப்படுகிறார்கள் என்கிறார் சிறிசாந்த்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

"நான் யாரைக் கண்டும் பயப்பட மாட்டேன். மீண்டும் அணியில் இடம்பிடித்ததற்காக ஆஸ்திரேலிய வீரர்கள் வேண்டுமானால் என்னைக் கண்டு பயப்படலாம். சில மாதங்கள் ஓய்வெடுத்தது புத்துணர்ச்சி அளித்துள்ளது. சிறிசாந்த் எப்போதும் சிறிசாந்த்தாகவே இருப்பான். எதற்காகவும் என்னை மாற்றிக் கொள்ள முடியாது. கிரிக்கெட்டை மிகவும் நேசிக்கிறேன். மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு விளையாடுவேன்.

"கிரிக்கெட் விதிகளை நன்றாக அறிவேன். அதை எப்போதும் மீற மாட்டேன். விளையாட்டின் எழுச்சி பாதிக்கும் வகையில் ஒருபோதும் நடந்து கொள்ளமாட்டேன். ஆக்ரோஷத்தை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது நன்றாகத் தெரியும்.

ஆர்.பி.சிங், பதான், இஷாந்த் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார்கள். எங்களுக்குள் போட்டி, பொறாமை எதுவும் கிடையாது. எனது குறிக்கோள் இந்திய அணி வெற்றிபெற வேண்டும் என்பது மட்டும்தான். ஆஸ்திரேலிய வீரர்களிடம் இருந்து நல்ல விடயங்கள் கிடைக்கும் பட்சத்தில் கற்றுக்கொள்ள தயங்கமாட்டேன். நமது பந்துவீச்சாளர்களிடம் வெற்றி சூட்சமத்தை கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

''காயம் காரணமாக டெஸ்ட் தொடரில் பங்கேற்க முடியவில்லை. ஆனால், பேர்த் டெஸ்ட் வெற்றியை பெங்களூரில், அகன்ற தொலைக்காட்சித் திரையில் பார்த்தேன்.

''கடந்த 6 அல்லது 7 மாதங்களாக கையில் வலி அதிகமாக இருந்தது. தொடக்கத்தில் ஆயுள்வேதத்தில் அதிக நம்பிக்கை இல்லாத எனக்கு 14 நாள்களில் வலி நிவாரணம் கிடைத்தது. இது பெரும் ஆச்சரியத்தை அளித்தது. காயம் முழுமையாகக் குணமடைந்தமைக்கு உடலியக்க நிபுணர் ஜோன் குளோஸ்ரர் மற்றும் ஆயுள்வேத மருத்துவத்துக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.'' - இவ்வாறு சிறிசாந்த் கூறினார்.

## ஸ்ரீவ் பக்னருக்கு எதிராகக் கருத்து கவாஸ்கர் மீது ஐ.சி.சி. அதிருப்தி

டுபாய், ஜன.24

ஸ்ரீவ் பக்னருக்கு எதிராகக் கருத்துக் கூறிய கவாஸ்கருக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சிட்னி டெஸ்ட் போட்டியில் நடுவர்களின் தவறான தீர்ப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர், பக்னரைக் கடுமையாக விமர்சித்தார். ஐ.சி.சி. அமைப்பில் முக்கிய பொறுப்பில் உள்ள கவாஸ்கர், நடுவர் பக்னர் மீது வெளியிட்ட கருத்துகளால் ஐ.சி.சி. அதிருப்தியடைந்துள்ளது.

இதுகுறித்து ஐ.சி.சியின் தலைவர் டேவிட் மோர்கன் கருத்துக் கூறுகையில்,

''ஐ.சி.சியின் அதிகாரிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால், கிரிக்கெட் குழுவின் தலைவராகவுள்ள கவாஸ்கரின் கருத்துகள் சர்ச்சை எழுப்பியுள்ளது. அதிகாரிகள் தங்கள் பொறுப்புகளை மறந்து செயற்படுகின்றனர்.'' - என்றார்.

கவாஸ்கர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்துத்தான் இந்தியக் கிரிக்கெட் சபையும் (பி.சி.சி.ஐ.,) பக்னரை நீக்க வேண்டும் என போர்க்கொடி தூக்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அடிலெய்ட் ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைக்கும்

### கள அமைப்பாளர் தகவல்

அடிலெய்ட், ஜன.24

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளிடையே 4ஆவது டெஸ்ட் போட்டி நடக்கவுள்ள அடிலெய்ட் மைதான ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்று கள அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆடுகள பராமரிப்பாளர் லெஸ் பர்டெட் கூறியவை வருமாறு:-

''ஆட்டத்தின் ஐந்து நாள்களும் ஆடுகளம் தாக்குப் பிடிக்கும். அடிலெய்ட்டில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேகமூட்டமாக இருந்தால், முதல் இரண்டு நாள்கள் வேகப் பந்துவீச்சுக்கு ஆடுகளம் ஒத்துழைக்கும். பின்னர் சுழற்பந்து வீச்சாளருக்கு சாதகமாக மாறும்.

''அடிலெய்ட்டில் பந்து நன்றாக எழும்புவதுடன் அதிகமாகத் திரும்பும். பேர்த் அளவுக்கு இங்கு 'சுவிங்' ஆகாது. அதே சமயம் துடுப்பாட்ட வீரர்கள் சற்றுக் கவனமாக ஆடினால், நிச்சயமாக அதிக ஓட்டங்களைக் குவிக்கலாம். 1992ஆம் ஆண்டுக்குப் பிறகு இங்கு நடந்துள்ள டெஸ்ட் போட்டிகளில், சமனிலையான போட்டிகள் குறைவு. இம்முறை கடைசி நாளில் முடிவு தெரியும் என எதிர்பார்க்கிறேன்.'' - இவ்வாறு கூறினார்.

### ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ்

# ஷரபோவாவிடம் மண்டியிட்ட முதல்நிலை ஜஸ்ரின் ஹெனின்

மெல்போண், ஜன.24



ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டியின் காலிறுதியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ரஷ்யாவின் மரியா ஷரபோவா, முதல்நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்ரின் ஹெனினை வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் தொடர் மெல்போணில் நடைபெற்றுவருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த மகளிர் ஒற்றையர் காலிறுதியில் தரவரிசையில் 5ஆவது இடத்திலிருக்கும் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, 'நம்பர்-1' வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனினை எதிர்கொண்டார். முதல் செற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷரபோவா 6:4 என வென்று அசத்தினார். இரண்டாவது செற்றில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய இவர் 6:0 என அதனையும் தன்வசப்படுத்தினார். இறுதியில் 6:4, 6:0 என்ற நேர் செற்களில் வென்று அரையிறுதிக்குள் ஷரபோவா நுழைந்தார்.

இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 32 ஆட்டங்களில் வெற்றிபெற்றிருந்த ஹெனினின் வெற்றிப் பயணத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. மேலும் 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஹெனின் [illegible] கணக்கில் ஒரு செற்றை இழப்பது இதுவே முதல் தடவையாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் வழிப் பாதுகாப்பு தீவிரமடைந்ததால் புலிகளின் போரிடும் ஆற்றல் பாதிப்பாம்!

கொழும்பு, ஜன. 24

கடல் பாதுகாப்பு குறித்து சர்வதேச அளவில் அதிகரித்துவரும் கரிசனையும், பிராந்திய ஒத்துழைப்பும் விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றலைப் பாதித்துள்ளன என்று பாதுகாப்புத்துறை நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடற்படையைப் பொறுத்தவரை அழிப்பதை விட கண்டுபிடிப்பதே முக்கியமானது எனவும், சர்வதேச அளவில் இதற்கான ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாகவும் அதிகாரி ஒருவர் 'இந்தோ - ஆசிய' செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

அந்தமானின் போர்ட் பிளயரில் 12 நாடுகளின் கடற்படைகள் பங்குகொள்ளும் மாநாட்டிற்கு இந்திய கடற்படை ஏற்பாடு செய்துள்ளதையும் இலங்கையின் 'சுரனிமல' எனும் கப்பல் அதில் கலந்து கொள்ளவுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தமான் பகுதியிலேயே ஆயுதக் கடத்தலும், கடற்கொள்ளையும் அதிகம் இடம்பெறுகின்றன எனவும் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இலங்கைக் கடற்படையால் அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பல்கள் ஜாவா தீவிற்கு மேற்கேயே நங்கூரமிட்டு நிற்பது வழமை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மார்ச் 10 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை விடுதலைப் புலிகளின் பல கப்பல்களை இலங்கைப் படைகள் அழித்துள்ளன என இலங்கைக் கடற்படையின் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க 'இந்தோ ஆசிய' செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

800 முதல் 1000 தொன் பொருள்களைக் கொண்டு செல்லக்கூடிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. பெருமளவு ஆயுதத் தளபாடங்களும் அழிக்கப்பட்டுள்ளன - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவை விடுதலைப் புலிகளின் கப்பல்களே. அவர்கள் அந்த நடவடிக்கையில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களின் பெயர் விவரங்களையும் வெளியிட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கா வழங்கும் பாதுகாப்பு

மேலும் இலங்கைக்கு அமெரிக்காவின் பாதுகாப்பும் கிடைத்துள்ளது. ஆயுதக் கடத்தல் காரர்கள் அவர்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் திருகோணமலை - கொழும்பு துறைமுகங்களைப் பயன்படுத்துவதை அமெரிக்கா விரும்பவில்லை என்கின்றன இராஜதந்திர வட்டாரங்கள்.

கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன்களைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா விசேட தொழில்நுட்பத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது. மேற்கு கடலோரத்தைக் கண்காணிப்பதற்கும் 'ராடர்'களையும் அது வழங்கவுள்ளது.

கடந்தவருடம் திருகோணமலைக்கு சென்ற அமெரிக்கத் தூதுவர் 'ராடர்'களை அச்சமயம் வழங்கியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் கப்பல்களை இடைமறிப்பதற்கே இவை வழங்கப்படுகின்றன என அவர் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் காரணமாக 'அமெரிக்கா இராணுவ உபகரணங்கள் எதனையும் வழங்க முடியாவிட்டாலும் கடற்பாதுகாப்பு வகை இராணுவ தளபாடங்களை வழங்கலாம். மேலும் அமெரிக்க கடற்படைத் தளபதியொருவர் இலங்கைக்கு கடந்த வாரம் வருகைத் தந்திருந்தார்.

- இவ்வாறு மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (சி)

## புத்தளத்தில் வசித்த யாழ்.வாசி மாயம்

யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கடந்த 7 வருடங்களாகப் புத்தளத்தில் வசித்து வந்தவருமான தம்பிராஜா புனிதவேல் (வயது - 50) என்பரைக் கடந்த 20 ஆம் திகதி முதல் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இல. 53, நகரசபை விடுதி போல்ஸ் வீதி, புத்தளத்தில் வசித்த இவர் தனியார் விநியோக நிறுவனமொன்றில் கணக்காளராகப் பணிபுரிந்து வந்தார் என்று கூறப்படுகின்றது. இவரைக் காண்பவர்கள் 032 - 22266948 என்ற இலக்கத்துடனோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (சி)

## கூட்டம்

குருநகர்,ஜன.24

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(202-51)

# இனப்படுகொலை சுத்திகரிப்பால் அல்லலுறும் மக்களை சர்வதேசம் காப்பாற்ற வேண்டும்

## பிரிட்டிஷ் பிரதமர் வலியுறுத்து

சென்னை, ஜன. 24

"இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு போன்றவற்றில் சிக்கி அல்லலுறும் மக்களைக் காப்பாற்றுவதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்."

- இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அவர் அங்கு இடம்பெற்ற சிறப்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு, யுத்தக் குற்றங்கள் போன்றவற்றில் சிக்கியுள்ள மக்களை அந்தந்த நாட்டு அரசுகள் காப்பாற்றத் தவறும் பட்சத்தில் சர்வதேச சமூகம் இதில் தலையிட்டு அவர்களைக் காப்பாற்றும் உலக ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

கோர்டன் பிறவுணின் இந்தக் கருத்து அவரது வெளிவிவகார கொள்கைப் பிரகடனமாகக் கருதப்படுகின்றது.

கடந்த வாரம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இலங்கை குறித்து இடம்பெற்ற விவாதத்தில் இதேபோன்ற கருத்துமுன் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை விவ்காரத்தில் தமக்கு உள்ள 'பாதுகாப்பதற்கான பொறுப்புணர்வு' குறித்து சுட்டிக்காட்டியதுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கண்காணிப்பகத்தை அமைக்கவேண்டும் எனவும் வற்புறுத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# இராணுவத்தில் சேரவந்த 7 பேர் அ'புரவில் கைது!

அநுராதபுரம், ஜன. 24

இராணுவத்தில் இணைந்து கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு வருகை தந்தவர்கள் என்று கூறப்படும் ஏழுபேர் அநுராதபுரம் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்திற்கு ஆள்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சை கடந்த திங்கட்கிழமை அநுராதபுரத்தில் இடம்பெற்ற சமயம் இவர்கள் ஏழுபேரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

முஸ்லிம் பெயர்களில் தம்மை அடையாளப்படுத்தி வந்த இந்த இளைஞர்கள் மொனறாகலை, அரகலங்வில மற்றும் வெலிகந்தைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் - இவர்களுக்கு முறையாகச் சிங்களம் பேசத் தெரியவில்லை என்றும் -

அவர்கள் கொண்டுவந்த ஆவணங்களும் சந்தேகத்திற்குரியனவாக இருந்தன என்றும் - பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று அநுராதபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சி)



கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் அனுசாணையுடன் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிரமதான நிகழ்வையும் மரம் நாட்டு நிகழ்வையும் நடத்தியது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் செல்வி.திருத்தேவி திருநாவுக்கரசு மரக்கன்று ஒன்றை நாட்டுவதையும், கியூடெக் நிறுவன சமாதானத் திட்ட இணைப்பாளர் திருமதி.லலிதா விக்ரர், சம்மேளனத் தலைவர் க.புஷ்பராசா, செயலாளர் செ.குமாரசிங்கம் மற்றும் உறுப்பினர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

# பண வீக்கத்தில் ஒரு சாதனை! நவம்பரில் 26.2 வீதம் அதிகம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் ஆட்சிக் காலத்தில் பணவீக்கமும் புதிய சாதனையை நிலை நாட்டியிருக்கின்றது.

நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 26.2 வீதத்தை எட்டியதாக மத்தியவங்கி அதிகாரிகள் நேற்றுமுன்தினம் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

முழு நாட்டிலும் விலை அதிகரிப்பை விசாலமாகக் கணக்கிட வகைசெய்யும் நுகர்வோர் விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 223.3 புள்ளியிலிருந்து 281.8 புள்ளியாக உயர்ந்து 26.2 வீத அதிகரிப்பைக் காட்டி இருக்கின்றது.

எரிபொருள் விலையைப் பன்னிரண்டு வீதத்தாலும் மற்றும் அடிப்படை உணவு வகைகள், கிழங்கு, சீனி போன்றவற்றின் மீதான வரியைக் கணிசமான அளவினாலும் அரசு அதிகரித்ததை அடுத்தே பணவீக்கம் இத்தகைய பெரும் பாய்ச்சலை எட்டியிருப்பதாகக் கூறப்பட்டது.

நாடு முழுவதிலும் கணிப்பிடப்பட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் 26.2 வீத அதிகரிப்பைக் காட்டிய அதே சமயம், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரிப்பு 19.6 வீதமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பணவீக்கம் இவ்வாறு எகிறி வருவதால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை நாடுபெரும் தாக்கமாக உணர வேண்டியிருக்கும். அதற்கு அதிக காலம் எடுக்காது எனப் பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

போரியல் போக்கில் தீவிரம் கொண்டுள்ள அரசு, இவ்வருடத்தில் தனது பாதுகாப்புச் செலவினத்தை 20 வீதத்தால் அதிகரித்து, சுமார்.16 ஆயிரம் கோடி ரூபாவை அதற்குச் செலவிடத் தீர்மானித்திருக்கின்றது. எனினும் அரசு யுத்தத்தை ஒட்டி மேற்கொள்ளும் எடுப்புகளைப் பார்த்தால் யுத்தச் செலவினம் அந்த எல்லையையும் தாண்டும் அறிகுறிகளே தோற்றுகின்றன.

அப்படி நேர்ந்தால் பொருளாதாரம் மேலும் அதலபாதாளத்தில் வீழும். பணவீக்கமும் மேலும்எகிறும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (சி)

# ஊஞ்சல் போன்று ஆடிய பாபாவின் படம்

நவாலியிலுள்ள வீடொன்றின் சுவரில் மாட்டப்பட்டிருந்த சாயிபாபா படம் திடீரென ஊஞ்சல் ஆடுவது போன்று ஆடிய அதிசயத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தனர்.

நவாலி அரசடியைச் சேர்ந்த கிளை முகாமையாளர் கோ. கிருபானந்தன் என்பவரது வீட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தைப்பூச தினத் தன்று காலை 8 மணியளவில் இந்த அதிசயம் நிகழ்ந்தது. அவரின் மகள் பாபாவின் படத்தை வணங்கிக் கொண்டிருந்த வேளை சுவரில் மாட்டப்பட்டிருந்த இரண்டடி உயரமுடைய படம், திடீரென ஊஞ்சல் ஆடுவதுபோன்று அங்கும் இங்குமாக சுமார் ஒரு மணி நேரம் வரை ஆடியது.

பின்னர் நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரையும் அதன் பிற்பாடு மாலை 4 மணி முதல் 4.30 மணிவரையும் பாபாவின் படம் ஆடியது.

இச் சம்பவம் காட்டுத் தீபோல் ஊரெல்லாம் பரவியதைத் தொடர்ந்து அயல் கிராமங்களிலிருந்தும் வந்து பலர் அதனைப் பார்வையிட்டனர். பலரும் அங்கு கூடியிருந்து பஜனை செய்து வணங்குவதைக் காணமுடிந்தது. பாபாவின் படத்திலிருந்து விபூதி, தீர்த்தம் ... ட்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஆனால் ஊஞ்சல் ஆடுவது புதுமையென்று மக்கள் பேசிக் கொண்டனர். (அ-100)

# அன்பின் வடிவம் இறைவன்

உங்கள் முன்பாக யாராவது கஷ்டப்பட்டால், அவர்களது நிலையைக் கண்டு வெறுமனே பரிதாபப்படுவதோடு மட்டும் சென்று விடாதீர்கள். அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து, அதனை நிறைவேற்றி வையுங்கள். அதையும் அன்புடன் செய்யுங்கள். அவர்களுக்கு சிறு தீமை கூட வந்துவிடாத அளவிற்குப் பாதுகாப்புக் கொடுங்கள். அவர்களது மனம் நோகும்படியான வார்த்தைகளைப் பேசாதீர்கள். மென்மையாகவும், இனிமையாகவும் பேசுங்கள். ஆதரவற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும் நீங்கள் செய்யும் சிறிய உதவிகூட இறைவனின் கணக்கில் மிகப் பெரிய பலனாகக் கருதப்படும். அதற்காக அந்தப் பலனை எதிர்பார்க்காமல், பிறர்க்கு உதவுவதை உங்கள் கடமையென நினைத்து உதவுங்கள்.



உலகில் வாழும் அனைவரும் இறைவனைத் தந்தையாக ஏற்றுக்கொண்டு, சகோதர, சகோதரிகளாக வாழுங்கள். சகோதர பாசத்துடன் பழகுங்கள். அவர்களுக்கு, நீங்கள் வைத்திருக்கும் பொருளில் பங்கு கொடுக்கத் தேவையில்லை. ஆனால், அன்பை மட்டும் தவறாமல் செலுத்துங்கள். ஏனெனில், கருணை பொழியும் குணம்கொண்ட இறைவன், அன்பின் வடிவமாகவே இருக்கிறார். நீங்கள் ஒருவரிடம் அன்பு செலுத்தும்போது, இறைவன் உங்களிடம் அதைவிடப் பல மடங்கு அதிகமான அன்பு செலுத்துகிறார்.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் யாழ்.நீதிமன்ற நீதிவானாகவும் திருமதி ஜோய் மகாதேவா அண்மையில் பதவியேற்றார். யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அவர் பதவியேற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள் அவருக்குப் பாராட்டுத் தெரிவிப்பதையும் படங்களில் காணலாம்.

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள வருமாறு-

**நெடுந்தீவு ம.வி.**

அ.கிறிஸ்ரியன் அருள்ஜீவன் - 2ஏபி, ஞா.அமலஜெலான் - 2ஏபி, அ.மேரிடெனா - ஏ2பி, க.ரஜீவ்பிரகாஸ் - ஏபிசி, சே.ஜீவன் - ஏபிசி, அ.மியூரின்ராஜ் - ஏ2சி, ச.றஜீன் - 2பிசி, வி.மேரிஜனா - பி2சி, ஜே.ரேரன் லோட் - ஏசிஎஸ், அ.தயாபரன் - 3பி.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.24

காரைநகர், களபூமி திக்கரை முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை 9.35 மணி தொடக்கம் 11.30 மணி வரை உள்ள சுபவேளையில் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்ச தள, திரிதளராஜ கோபுரங்களுக்கும் சுப்பிரமணிய பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (202-25)

* * *

குருநகர்,ஜன.24

குருநகர் புதுவை மாதா யாத்திரைத் தலத்தின் வருடாந்த திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நாளாந்தம் பிற்பகல் 4 மணிக்கு நவநாள் ஆராதனைகள் திருச்செபமாலையுடன் நடைபெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணைநாதர் விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் நடைபெறும். (202-51)

## யாழ்.இளவாலை பஸ் சேவை சீரில்லை; மாணவர்களும் பொதுமக்களும் பாதிப்பு

வலி.வடக்கு,ஜன.24

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக இளவாலை செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபையின் 795ஆம் இலக்க பஸ்சேவை சீரில்லை. இதனால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக தெல்லிப்பழை, பன்னாலை ஊடாக இளவாலை வரை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 795ஆம் இலக்க பஸ் சேவை நடைபெறுகின்றது.

கடந்த சில நாள்களாக இச்சேவை சீரான முறையில் நடைபெறாமையால் பருவ கால சீட்டுகளைப் பெற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட நாளாந்த பயணிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சேவையின் மூலம் காலையிலும் நண்பகலிலும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், மெய்கண்டான் மகா வித்தியாலயம் மற்றும் மகாஜனக் கல்லூரி உட்பட பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இப்பகுதியில் உள்ள மக்களும் கூட இந்த பஸ் சேவையையே தெல்லிப்பழை, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கும் நம்பி இருக்கின்றார்கள்.

இதுவிடயமாக தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உரிய சேவை சீராக நடைபெற யாழ்.சாலை முகாமையாளர் நடவடிக்கையெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202-86)

## அதிகாலையிலேயே சூடு பிடிக்கிறது குருநகர் சின்னக்கடை மீன்சந்தை

### பதப்படுத்திய கடலுணவுகள் தாராளமாக விற்பனை

யாழ்ப்பாணம்,ஜன.24

குருநகர், சின்னக்கடை மீன்சந்தை அதிகாலைவேளைகளில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

சந்தையின் கிழக்குப் புறமாக அமைந்துள்ள வீதியில் வியாபாரிகள் அதிகாலை 6 மணிக்கே கூடுகின்றார்கள்.

மீன் வியாபாரிகள் முதல்நாள் கொள்வனவு செய்து குளிரூட்டியில் பதப்படுத்தி வைத்த மீன்களை அதிகாலையில் விற்பனை செய்கின்றனர்.

பதப்படுத்தப்பட்ட கடலுணவுகள் ஆகையால் கணவாய், நண்டு, இறால் மற்றும் மீன்வகைகள் இந்நேரத்தில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

வேலைத் தளங்களுக்குச் செல்பவர்கள், அதிகமாக இந்த நேரங்களிலேயே அதிகளவில் மீனைக் கொள்வனவு செய்ய வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (202-51)

## கொத்தலாவலை வாய்க்கால் இடிந்துவிழும் நிலையில்; புனரமைத்துத் தருமாறு விவசாய சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.24

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கொத்தலாவலை வாய்க்கால் மீள் புனரமைப்பின்றி இடிந்து விழும் நிலையில் உள்ளது. அதனை உடன் புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் க.கருணாநிதியிடம் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

விவசாயிகள் இளைப்பாறுவதற்கு இடிகுண்டடியில் இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்படவேண்டும். முதலியார் குள வீதியை மீள்புனரமைப்புச் செய்ய நிதி ஒதுக்கித் தரவேண்டும்.

இவ்வாறு 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து - 2008இற்குள் மதிப்பீடு செய்து பிரதேசத்தை அபிவிருத்தி செய்து தரவேண்டும் என அக்கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது. (202-95)

## ஆனைக்கோட்டை தேநீர்க்கடையில் திருட்டு

நவாலி,ஜன.24

ஆனைக்கோட்டையில் நள்ளிரவு வேளை தேநீர்க்கடையொன்று உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவுவேளை ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள தேநீர்க்கடை உடைக்கப்பட்டு உள்ளே இருந்த மா, சீனி, உழுந்து, தேங்காய் எண்ணெய் போன்ற பல்வேறு பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை நவாலிப்பகுதியில் மீண்டும் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. (202-100)

## கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம்,ஜன.24

கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பயோரெக் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பின் மேற்படி நிலையத்திலேயே தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட யாழ்ப்பாண பரீட்சார்த்திகளின் விவரம் வருமாறு:-

வி.துஷ்யந்தி (திருநெல்வேலி வடக்கு), செ.செல்வரஞ்சனி (யாழ்ப்பாணம்), பா.தர்சினி (யாழ்ப்பாணம்), செ.ராஜ்குமார் (இளவாலை), தே.பிரியதர்சினி (யாழ்ப்பாணம்), இ.ரூபா (இணுவில்), து.கோணேஸ்வரன் (மீசாலை), ந.கிருஷ்ணரதி (நீர்வேலி), சு.சுரேகா (மானிப்பாய்). (202)

## ஆனைக்கோட்டையில் அறுவடை ஆரம்பம்

நவாலி,ஜன.24

ஆனைக்கோட்டை பிரதேச நெல் வயல்களில் அறுவடை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தைப்பூச தினமான கடந்த செவ்வாய்க்கிழமை சில விவசாயிகள் தமது நெல்லை அறுவடை செய்து அங்கேயே சூடு வைத்து உழவு இயந்திரங்களில் வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர். (202-100)

## வலி.தென்மேற்கில் ஆயிரத்து 820 பேருக்கு மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜன.24

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணத்தை ஆயிரத்து 820 பயனாளிகள கடந்த வருடம் முதல் பெறுகின்றனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 621 பேருக்கும் உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

காசநோய்க்காக இரு பயனாளிகளும் வெள்ள நிவாரணம் 9 பேருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக உணவில்லா பொருள்கள் 408 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இப்பிரதேசத்தின் 11 முதியோர் சங்கங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. முதியோர் அடையாள அட்டைக்கு 14 பேர் விண்ணப்பம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-95)

## யாழ்.மாவட்ட அரச அதிபராக தொடர்ந்தும் கணேஷ் சேவையில்

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.மாவட்ட அரச அதிபராக கே. கணேஷ் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவார் என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். யாழ்.மாவட்ட அரச அதிபரின் சேவை தொடர்ந்தும் தேவையாக இருப்பதாக அமைச் சரவை தீர்மானித்துள்ளது. எனவே மறு அறிவித்தல் வரை அவரது சேவை தொடரும் என யாழ்.அரச அதிபருக்கு அமைச்சின் செயலாளர்கடந்த திங்கட்கிழமை 21.01.2008 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (202)

## யாழ்.பிரதேச செயலகத்தில் வரி அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுகின்றது

குருநகர்,ஜன.24

இவ்வருடத்திற்கான மோட்டார் வாகன வரி அனுமதிப் பத்திரங்கள் யாழ்.பிரதேச செயலகத்தினால் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வரி அனுமதிப் பத்திரங்களைப் பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் பத்திரத்துடன் மோட்டார் வாகன காப்புறுதிச் சான்றிதழ், பிரதி அடையாள அட்டை, வாகன பதிவுப் புத்தகம் ஆகியவைகளைச் சமர்ப்பிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-51)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## புறொயிலரின் விலை குறைவு

குருநகர்,ஜன.24

யாழ்ப்பாணத்தில் புறொயிலர் கோழியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதுவரை ஒரு கிலோ 650 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சிக்கோழி தற்போது கிலோ 550 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதே நேரத்தில் கோழி மற்றும் தாரா முட்டை ஒன்று [illegible] தொடக்கம் [illegible] விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (202-51)

## கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 18,167 தே.அ.அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.24

கடந்த வருடம் முதல் 6 மாதங்களில் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு 18 ஆயிரத்து 167 தேசிய அடையாள அட்டைகள் கிடைத்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஆள்பதிவுத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] பித்தவர்களுக்கான [illegible] அட்டைகள் 13 ஆயிரத்து 531 உம் தொலைந்த அடையாள அட்டைகளாக ஆயிரத்து 322 உம் - திருத்தத்குரிய அடையாள அட்டைகளாக 3 ஆயிரத்து 314 ஆகவும் மொத்தம் 18ஆயிரத்து 167 தேசிய அடையாள அட்டைகள் 14 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் கடந்த வருடம் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

இக்குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைத்த 30 ஆயிரம் விண்ணப்பப்படிவங்களில் 13 ஆயிரத்து 610 விண்ணப்பப்படிவங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தும்பளை கிழக்கில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கென போரூட் நிறுவனம் சிறுவர் பூங்கா, பாலர் பாடசாலை என்பவற்றை அமைத்துக் கொடுத்துள்ளது.
அவற்றின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது சிறுவர்கள் விருந்தினர்களை வரவேற்பதை முதலாவது படத்திலும்-
போரூட் நிறுவன மனிதநேய உதவிகள் இணைப்பாளர் பி.ரூபேந்திரன் நாடாவெட்டி பாலர் பாடசாலையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும்-
சிறுவர் பூங்காவின் தோற்றத்தை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: சுந்தா)


## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்களை யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

**EURO GROUP OF COMPANIES**
35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963
(C551183)

## உரும்பிராய் Kids' Park ஆசிரியர் தேவை

1. ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய ஆசிரியை
இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. அனுபவமுள்ள முன்பள்ளி ஆசிரியை
ஐந்து வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் உள்ளவரும் ஆங்கிலத்தில் அறிவுறுத்தல்களை பிள்ளைகளுக்கு வழங்கக் கூடியவரும் க.பொ.த. (உ/த) சித்தியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகுதிக்கு ஏற்ப போதிய சம்பளம் வழங்கப்படும்.
சுயவிவரங்களுடன் 10.02.2008 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்கள் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.
**ஞான வைரவர் கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.** (70407)


## சிறப்புற நடைபெற்ற பொங்கல் நிகழ்வுகள்

குருநகர், ஜன.24

யாழ்.போதனா வைத்தியசாலையில் பொங்கல் நிகழ்வு அண்மையில் சிறப்புற நடைபெற்றது.

போதனா வைத்தியசாலையின் பிரதான வாயிலில் நடைபெற்ற இந்நிகழ்வில் இவ் வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலையின் கணக்காளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். பல வருடங்களுக்குப் பின்னர் இம்முறை வைத்தியசாலையில் பொங்கல் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (202-51)

* * *

யாழ்ப்பாணம், ஜன.24

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையினால் பொங்கல் விழா நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் மங்கள விளக்கை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், பிராந்திய ஆணையாளர் திருமதி பா.சிவலிங்கம், கிராம அலுவர் திருமதி பு.நாகேந்திரநாதன், சங்கீத பூசணம் க.கணபதிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் ஏற்றிவைத்தனர். (202-68)


## நீங்காத நினைவுகளுடன் ஒரு வருடம்



மண்ணில் 15.02.1933
விண்ணில் 04.02.2007
திதி: துதியை 24.01.2008

அன்பே வடிவமானவரே!
நீங்கள் இப் பூவுலகை விட்டு மறைந்து ஓராண்டு கடந்து விட்டது இன்னும் உங்கள் நினைவுகள் எம்மை வாட்டி வதைக்குதப்பா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அமரர் சின்னத்தம்பி இரத்தினம்**

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(சி/551186)

கெங்கா குடும்பம்,
மருமகன், மகள்,
பேரப்பிள்ளை.

## ORGAN

**இசைப்பயிற்சி வகுப்பு**
3மாத காலத்தில் சுயமாக பாடல்களை இசைப்பதற்கான சிறப்புப் பயிற்சி ஆரம்பம்
**27.01.2008 (ஞாயிறு)**
**9.30-12.00**
பயிற்சியாளர்: திரு.விஜிதரன்
**தூரிகை**
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
(70410)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலேசியாவில் தவப்பேறு
07 . 10 . 1933



கரவெட்டியில் சிவப்பேறு
26 . 12 . 2007

**அமரர் அன்னலட்சுமி கணபதிப்பிள்ளை**

பெற்றெடுத்த நாள் முதல் பிரியமுடன் எமை அணைத்து
உற்றதெல்லாம் எமக்களித்து உவகை கொண்ட அம்மாவே!
நீர் செய்த சேவைக்கு இவ்வுலகில் ஈடேது
உம்மை விட இவ்வுலகில் ஈடு செய்ய உறவேது?

கடந்த 26.12.2007 அன்று சிவபதமடைந்த எம் அன்புத் தாயின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (25.01.2008) வெள்ளிக்கிழமை இடம்பெறும். அத்தருணம் அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் மடம்,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
(சி/551180)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**


## கலாபூஷண விருது பெற்றவர் கௌரவிப்பு

குருநகர், ஜன.24

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட வி.ஜே. கொன்ஸ்ரன்ரைனை குருநகர் இளைஞர் கலைக்கழகம் பாராட்டிக் கௌரவித்தது.

குருநகர்காா்மேல் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு யாழ். பிரதேச செயலர் ம.ஜெகூ தலைமை தாங்கினார்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். யாழ்.மறைக் கோட்ட முதல்வர் வண.பிதா மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினார்கள். (202-51)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 . 12 . 1959



மறைவு
04 . 02 . 2007

**இளையதம்பி சந்திரகுமார்**

திதி: 24.01.2008 வியாழக்கிழமை

அன்புசொரிந்து அறிவென்னும் அமுதூட்டி
இன்பமுடன் நாம் வாழ எந்நாளும் உழைத்திடுவீர்!
துன்ப இருளகற்றிச் சுடராக இருந்தீர்கள்!
வந்த பணி முடித்து வானோடு சென்றாலும்
எங்கள் வாழ்வுக்கு ஏணியாய் இருந்திடுவீர்!
முத்தான வாழ்வுக்கு முதுகெலும்பாய் இருந்தீரே!
அன்பாய் அரவணைத்தீர்! தரணியில்
தாய் சீரணி நாகபூசணியின் தாழ்கீழ் இருந்திடுவீர்!

மனைவி: புஸ்பமலர்,
பிள்ளைகள்:
திலக்ஷன் (லண்டன்),
சாருஜன், விதுஷன்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.
(சி/551185)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி
**வள்ளியம்மைப்பிள்ளை அம்பலவாணபிள்ளை**
அவர்களின் பாசமிகு அன்புத் தந்தை
அமரர்
**விஸ்வநாதர் தனபாலசிங்கம்**
மலர்வு 21-10-1931
உதிர்வு 25-12-2007

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை முப்பத்தோராம் நாளில் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

யா/ வரணி மகாவித்தியாலயம்,
வரணி.
(70390)

அதிபர்,
ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# காலாவதியான காகிதத் திட்டத்துக்கு உயிர் கொடுத்து உசுப்பேற்றும் முயற்சி

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்களையும் ஏனைய சில கட்சிகளின் தலைவர்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலையில் தமது அலரி மாளிகை இல்லத்துக்கு அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அதிகாரப் பகிர்வுக்கான முன்னேற்பாடாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டவற்றைத் தாம் நடைமுறைப்படுத்த விழைகின்றார் என்ற தகவலை ஜனாதிபதி அங்கு கூடியிருந்த கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்தார்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் - 1988 இல் - இந்திய அமைதிப்படைகளின் பிரசன்ன காலத்தில் - கொண்டுவரப்பட்டதே அரசமைப்பின் இந்த 13 ஆவது திருத்தம்.

அதை அப்போது முழு அளவில் எதிர்த்த மஹிந்தர் அணியே இப்போது அதைத் தூசு தட்டித் தூக்கி எடுத்துத் தூர வாருகின்றது.

அவ்விவகாரத்தை ஒட்டி நேற்று முன்தினம் மாலையில் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமே ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினாராம் ஆனந்தசங்கரியார்.

''இருபது வருடங்களுக்கு முன்னர் நோயாளிக்கு 'அல்ஸர்' (குடல்புண்) நோய்க்குக் கொடுத்த மருந்தை, இப்போது அதே நோயாளி 'கான்ஸர்' (புற்றுநோய்) அடைந் திருக்கும் சமயத்தில் அதற்கும் கொடுக்க முனைகின்றீர்களே.....! இது நியாயமா?'' - என்று ஜனாதிபதியிடமே நேரில் கேட்டார் சங்கரியார். ஜனாதிபதியும் ஏதோ கூறி, சங்கரியாரைச் சமாளித்தார் என்று தகவல.

ஆனந்தசங்கரி கூறியவை கனகச்சிதமாகச் சரியானவைதான். ஆனால் இருபது வருடத்துக்கு முன்னர் வேறு ஒரு வருத்தத்துக்கு கொடுத்த அதே மருந்தை இப்போது மோசமான, பிற நோயால் பீடிக்கப்பட்டு நோய் முற்றியிருக்கும் அதே நோயாளிக்குக் கொடுக்க முயலும் இந்த 'டாக்டர்' அதன்மூலம் பெருத்த தவறு இழைக்கின்றார் என்பதை உணர்ந்திருந்தும், அந்த 'டாக்டரின்' பக்கமே தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருக்கும் சங்கரி போன்ற தமிழரை என்னென்று சொல்வது என்பதுதான் புரியவில்லை.

முரண்பாடுகளின் மொத்த வடிவம்தான் தென்னிலங்கையின் அரசியல் முறைமை என்றால் அதில் தப்பில்லை என்பதை தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தொடர்ந்து அச் சொட்டாக நிரூபித்து வருகின்றன.

இருப்து வருடங்களுக்கு முன்னர் ஒற்றைக்காலில் நின்று தாம் எதிர்த்த அதே அம்சங்களை, இப்போது நல்ல விடயங்கள் என்று புகழ்கின்றார் இலங்கை ஜனாதிபதி. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அந்த அடிப்படையே சிறந்தது எனப் புகழாரம் சூட்டவும் அவர் தவறவில்லை.

முன்னைய ஐ.தே.கட்சி அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தமிழர் தரப்புடன் - புலிகளுடன் - பேச்சு நடத்திய போது, அதுவரை போரினாலும் இயற்கைப் பேரழிவுகளினாலும் பாதிக்கப்பட்டு, அவலப்படும் ஈழத தமிழர்களின் கஷ்டங்களை - இன்னல்களை - உடனடியாகக் களைவதற்கும் அவர்களது அவசர - அவசிய மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் இடைக்கால நடவடிக்கைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்தகைய இடைக்கால ஏற்பாடு குறித்து ஏதும் பேசக் கூடாது என்றும் -

இறுதித் தீர்வு பற்றியதாகவே இரு தரப்புப் பேச்சுகள் அமைய வேண்டும் என்றும் -

புலிகளுடன் அமைதிப் பேச்சில் ஈடுபட்ட அந்த அரசின் மீது கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

இன்று ஜனாதிபதியாக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே அன்று அபபடி ஒற்றைக்காலில் நின்று அடம்பிடித்தது.

இடைக்கால ஏற்பாடுகள் குறித்துப் புலிகளுடன் பேச இணங்கியமையைக் காரணம் காட்டியே, அப்போது புலிகளுடன் அமைதிப் பேச்சில் ஈடுபட்டிருந்த ரணிலின் அரசின் மூன்று முக்கிய அமைச்சு அதிகாரங்களை மஹிந்தரின் இன்றைய ஆசனத்தில் அன்று அமர்ந்திருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிடுங்கினார். அன்று அதை மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அணியில் இனறு இருப்போர் எல்லோரும் நியாயப்படுத்தினர்.

இப்போது அதே மஹிந்தர் 'இடைக்கால ஏற்பாடு' என்ற பெயரோடு, உழுத்துப்போன 13 ஆவது திருத்தத்தைத் தூக்கிப் பிடிக்கிறார் - அதுவும் அதன் கீழ் பகிர்ந்தளிக்க உறுதிப்படுத்தப்பட்ட பல அதிகாரங்களை வெட்டிக் குறைக்கும் கபடத் திட்டத்துடன்.

இராணுவத் தீர்வு முயற்சியைக் கைவிட்டு நம்பகத்தன்மையுடைய - விசாலமான - அதிகாரப் பகிர்வுக்கு இலங்கை அரசு முன்வரவேண்டும் என இந்திய - பிரிட்டிஷ் பிரதமர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ள பின்னணியில் சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றுவதற்காக பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் என்ற நாடகத்தை இப்போது அரங்கேற்றுகின்றார் மஹிந்தர்.

இருபது வருடங்களுக்கு முன்பே பயனின்றித் தோற்றுப்போய், காலாவதியான காகிதத் திட்டத்துக்கு இப்போது உயிரூட்டி, உலவவிட்டு, அதிசயம் படைக்கப் போகின்றவராக அவர் தம்மைக் காட்டுகின்றார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறுபான்மையினரையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் தென்னிலங்கை அரசியல் தந்திரோபாயத்தின் - நரித்தந்திரத்தின் - மற்றொரு அங்கம் இப்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பெயரால் கட்டவிழ்கிறது. அவ்வளவே.

# யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட நிறுவனங்களை வரியைச் செலுத்தி உரிமத்தை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்.மாநாகர சபை எல்லைக்குட்பட்ட சகல நிறுவனங்களையும் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்தி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கேட்டுள்ளார்.

வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வைத்திய ஆலோசனை நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் போன்ற உயர் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றையே வியாபாரவரியையும் தொழில் மீதான வரியையும் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும், தொழில் மாற்றம் செய்பவர்களும் தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் அவற்றை எழுத்து மூலம் மாநகர சபைக்கு அறியத் தரவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை -

மாநகர எல்லைக்குள் பாவனையிலுள்ள சைக்கிள்களுக்கும் வளர்ப்பு நாய்களுக்கும் இந்த ஆண்டுக்கான உரிமத்தை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு மாநகர ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (202)

## மாகியப்பிட்டி முதியவர்களுக்கு சாந்திகம் பொருள் உதவி

வலி.தென்மேற்கு,ஜன.24

மாகியப்பிட்டி முதியோர் சங்கத்தைச் சேர்ந்த 83 முதியவர்களுக்கு சாந்திகம் நிறுவனம் படுக்கை விரிப்பு, பாய், அரிக்கன் லாம்பு போன்றவற்றை வழங்கியுள்ளது.

இதேவேளை - இக்கிராமத்திலுள்ள 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு உளவளப் பயிற்சி வழங்குவதற்கும் சாந்திகம் முன் வந்துள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் இங்கு நடத்தப்பட்டுள்ளது. (202-135)

## படையினரின் சூட்டில் ஒருவர் பலி

கொழும்பு, ஜன. 23

மொனறாகலை மாவட்டம், தனமல்வில, லுணுகம்வெஹரக் காட்டுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் குழு ஒன்றின் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் காயமடைந்திருக்கிறார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

அந்தக் காட்டுப் பகுதியில் கஞ்சாப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டிருக்கிறார். (சி)

# வேலணைப் பிரதேச மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் வழிகாட்டிப் பயிற்சிகள்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நிதி ஒதுக்கீடு

குருநககர், ஜன.24

வேலணை செட்டிப்புலம் துறையூர் கிராமத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் இளைஞர்களுக்கு மாற்றுத் தொழில் வழிகாட்டியாக மேசன், தச்சு தொழில்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளன.

இதற்கென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

பயிற்சிநெறியை வழங்குவதற்கான பயிற்சியாளர்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

. வட்டுக்கோட்டை தொழில்நுட்ப நிறுவனம் பயிற்சிகளை வழங்கவுள்ளது. (202 - 51)

# யாழ்.மாவட்டத்திலிருந்து நெல்லை ஏற்றுமதி செய்வதற்கு கப்பல் வசதி

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக இலங்கை வர்த்தக சபைக்கு மேலும் ஒரு கப்பலை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த திங்கட ிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. கப்பலைப் பெற்றுக் கொடுப்பதுடன் அக் கப்பலுக்கு எந்தவிதமான வரியோ துறைமுகக் கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விவசாய உற்பத்திப் பொருள்களைத் தென் பகுதிக்குக் கொண்டு செல்வதற்கான வசதிகளை மேம்படுத்துமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். (202)

# உள்ளூராட்சி சபைகளுக்கு 'பிக்கப்' வாகனங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.24

'பிக்கப்' வாகனம் இல்லாத உள்ளூராட்சி சபைகளுக்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அவற்றை வழங்கியுள்ளார்.

வாகனங்களைக் கையளிக்கும் நிகழ்வு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச சபைகளுக்கும்- பிக்கப் வாகனங்கள் இல்லாத பிரதேச சபைகள், நகர சபைகளுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை - இரு சக்கர லான்ட் மாஸ்ரர் தேவையுள்ள சபைகளுக்கும் நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ளன. (202-95)

## உள்ளூராட்சி மறுசீரமைப்பு: கொழும்பில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 24

உள்ளூராட்சி மறு சீரமைப்பு - உள்ளூராட்சி பலப்படுத்தல் தொடர்பாகக் கொழும்பில் இன்று உயர்மட்டக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் மற்றும் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அங்கு உள்ளூராட்சி மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வரும் விடயங்கள் ஆராயப்படவுள்ளன. எதிர்வரும் மாதத்தில் இடம்பெறும் தேசத்தின் மகுடம் கண்காட்சி பற்றியும் ஆராயப்படும்.

நீண்ட காலத்திற்குப் பின்னர் உள்ளூராட்சி விடயமாகக் கொழும்பில் கூட்டம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202- 95)

# வீர விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன. 24

இலங்கையில் வீரப் பொதுமக்கள் மன்றம் வீரப் பொதுமக்களின் வீர விருது 2008 இற்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கெனக் குடிமக்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

'புதல் பிரபு தங்க விருது' தானாகவே முன்வந்து தன் உயிரைத் துச்சமாகப் பிறர் உயிரைக் காப்பாற்றப் போராடிய ஒருவருக்கு வழங்கப்படவுள்ளது. மேற்படி விருதுக்கு நிராக இல்லாத வீரச் செயலைச் செய்த ஒருவருக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 27 ஆம் திகதி முன்னர் 'சுகன் பி.சந்திரரட்னே, தலைவர், குடிமக்களின் வீரச் செயல்களுக்கான மன்றம், 137 ஏ, சிறீ சித்தாராம வீதி, வலான, பாணந்துறை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# வட பகுதிக்கு இடமாற்றம் பெற்றவர்கள் கடமையைப் பொறுப்பேற்க முடியாத நிலை

## போக்குவரத்துச் சிரமமே காரணமாம்

யாழ்ப்பாணம், ஜன. 24

கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களில் அமைச்சு மற்றும் அரச திணைக்களங்களில் இருந்து வட பகுதிக்கு இடமாற்றம் பெற்றவர்கள் உடன் கடமைக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் பெற்றவர்கள் தாங்கள் இதுவரை காலம் பாவித்த பொருள்களையும் உபகரணங்களையும் - கப்பலில் ஏற்றிவருவதற்கான வசதி மற்றும் அனுமதி கிடைக்காததால் பெரும் அவலப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ரயில் மற்றும் போக்குவரத்து வசதிகள் பெருமளவில் இருந்ததினால் இப்பிரச்சினை ஏற்படவில்லை எனவும் -

தற்போது போக்குவரத்து நெருக்கடிநிலை நிலவுவதால் இந்த இடமாற்றங்களால் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இடமாற்றம் பெற்ற அலுவலர்கள் மீண்டும் அதே அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கான அனுமதியைக் கோருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (202-95)

## நாளை

| | |
|---|---|
| தை - 11 | வெள்ளிக்கிழமை 25.01.2008 |
| நட்சத்திரம் : | மகம் மு.ப.:01.53 வரை |
| திதி : திருதியை மு.இ.: 06.30 | |
| சுபநேரம் : | 06.36 - 08.06 |
| [illegible] | [illegible] |

# திருமலையில் திங்கள் இரவு ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன. 24

திருகோணமலை நகரை அண்டிய உப்புவெளியிலுள்ள அன்புவழிபுரப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். எனினும் கொலை செய்யப்பட்டவர் இதுவரை இனங்காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாத ஒருவரே இந்நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றார் என்றும் - இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for Visiting Instructor for the following Sports fields in the Physical Education Unit up to 05.02.2008.

| | | |
|---|---|---|
| Badminton (Men)/ | Chess (Men)/ | Chess (Women)/ |
| Gymnastic (Men) / | Karate (Men) / | Table Tennis (Men)/ |
| Table Tennis (Women)/ | Tennis (Men)/ | Weight lifting (Men). |

**Rate of payment.' Rs.250 / per hour**

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per form at the People's Bank. University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self - addressed stamped envelope** 23x10 c.m. in size.

Those who wish to apply **for more than one field** should make **separate applications.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

**REGISTRAR**
**2008.01.18**

## JAFFNA COLLEGE
### ANNUAL INTER - HOUSE ATHLETIC MEET

will be held
**On Friday the 25th January 2008 at 1.00p.m**
on the Bicknell Grounds
**Chief Guests:**
Mr.Kandiah Kumarasamy
*Asst.Director of Phy.Ed, Jaffna Zone*
and
Mrs.Sivaneswary Kumarasamy
*Senior Asst. Registrar, University of Jaffna.*
You are cordially invited

Jaffna College, Vaddukkoddai. (C/551191) Principal.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

953 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**26 27 29 45**

துலாம்

**22-01-2008**

செல்லுபடியாகும் தொடர் .இல. 4570854 - 4582302

ஜக்பொட் பரிசு ரூபா.3,943,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| [illegible] | 241,730 | 10/- | 2,417,300/- |
| [illegible] | 22,228 | 20/- | 444,560/- |
| [illegible] | 22,024 | 30/- | 660,720/- |
| [illegible] | 2,030 | 100/- | 203,000/- |
| [illegible] | 591 | 500/- | 295,500/- |
| [illegible] | 56 | 5,000/- | 280,000/- |
| [illegible] | 3 | 100,000/- | 300,000/- |
| [illegible] | - | 3,943,550/- | |
| மொத்தம் | | | 4,601,080/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 288,667 | | 5,624,580/- |

**இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,483,600/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 4573410-0-11 |
| களுத்துறை | 4575836-9-28 |
| மாத்தளை | 4580521-2-68 |
| மட்டக்களப்பு | 4581037-0-13 |
| பொலன்னறுவை | 4572199-4-42 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.24

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப் பட்டுள்ள புதிய கட்டடம் இன்று காலை 9 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி வே.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (1)


## அறிவித்தல்

**1st in Com., B.Com. (I, II & III)**

19, 20.01.2008ஆம் திகதிகளில் தடைப்பட்ட விரிவுரைகள் யாவும் 26.01.2008முதல் அதே நேர அட்டவணையில் 464, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவில் நடைபெறும்.

(சி/551193) DCM ஆசிரியர்கள்.

## விற்பனைக்கு

எமது சபையிலுள்ள ரொபின் பிஸ்ரன் 19, வோட்டர் சீல் 25, வாசர் 25 ஆகியன மொத்தமாக விற்பனை செய்யப்படவுள்ளன.

முடிவு திகதி: 31.01.2008

தொடர்புகளுக்கு:

தொ.இல.: 222 2324
வீரசிங்கம் மண்டபம். செயலாளர், யாழ்.மா.கூ.சபை. (சி/551189)

## விலைக் கூறுதோரல்.

எமது வீரசிங்கம் மண்டபத்தின் இருபக்கங்களிலுமுள்ள கதவுகளுக்கு (8) இரும்புப் பட்டம் போடுவதற்கான விலைக்கூறுகள் கோரப்படுகின்றன. காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

முடிவுதிகதி: 31.01.2008

தொடர்புகளுக்கு:

தொ.இல.: 222 2324
வீரசிங்கம் மண்டபம். செயலாளர், யாழ்.மா.கூ.சபை. (சி/551190)

## சமையல் ஆள் தேவை

சகல சிற்றுண்டி வகைகளும் உணவும் தயாரிக்கக்கூடிய சமையல் ஆள் உடன் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆல் நியூ அருண் ஐஸ்கிறீம்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கிறோம்

எமது கல்லூரிச் சித்திர ஆசிரியர் A.J.துஷ்யந்தனின் அன்புத் தந்தை

**யோசேப் அன்ரனி**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்தகவலையடைவதோடு, அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. ஆசிரிய வட்டம். (70430)

## மரண அறிவித்தல்

திருமதி
### சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை



கோண்டாவில் கிழக்கு அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை நேற்று (23.01.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கந்தவேணி, சதீஸ்குமார் (லண்டன்), குலதேவகுமார் (மேற்பார்வையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்.), சத்தியா (இறுதிவருட மாணவி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராசாவின் (யாழ்.மாநகரசபை) பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2008) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். தகவல்: குலதேவகுமார் (மகன்).

## உடுவில் மகளிர் கல்லூரி

எமது கல்லூரியின் 2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர விஞ்ஞானம், வர்த்தகம், கலைப் பிரிவு மாணவர்கள் அனைவரும் 25.02.2008 தொடக்கம் பாடசாலைக்கு வருகை தரவும்.

(70426) அதிபர்.

## மனதார வாழ்த்துகின்றோம்



23.01.2008 புதன்கிழமை ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்ற எமது ஆசிரியை

திருமதி
**இராஜேஸ்வரி ஞானரெட்ணம்**

அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புடன் திகழ வாழ்க, வாழ்க என மனதார வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்
சி.வாகீசன், ஆரூரன், யோ.றாஜினி,தர்சினி, ப.அனு, ஆரணி, றமணன் - வேலணை - 05.
யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். (70424)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத் துறையில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்ற

**வேலுப்பிள்ளை அம்பிகைபாலன்**
**B.A.(Hons), M.Phil.**

(முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணை விரிவுரையாளர், தற்போது முறைசாராக் கல்வி செயல்திட்ட அலுவலகர் வடமராட்சி வலயம்)

அவர்களை மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று, சாதனை புரிந்து பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.சி.சிவச்செல்வம் (ஓய்வுபெற்ற அதிபர்).
திருமதி சி.கண்ணகையம்மா.

சந்நிதி வீதி,
கதிரிப்பாய்,
அச்சுவேலி. (70426)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்
## External Degree
(Jaffna University)

- 1st in Com, BCom (Part I), BCom (Part II), BCom (final)
- GAQ, BA I, BA (final) ஆகிய பிரிவுகளுக்கான

ஆரம்பம்: 26.01.2008

## aat (SriLanka)
Intermediate level & Final

Medium - Tamil & English Exam:- Jun 2008

ஆரம்பம்:- 26.01.2008 Medium - English & Tamil

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road (Near Commercial Bank).
Jaffna.
(C/551192)

## மரண அறிவித்தல்

### சின்னையா குணரட்ணம்
**(லக்கி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)**



தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா குணரட்ணம் 22.01.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் விஜேயலக்சுமியின் அன்புக் கணவரும் குகனேஸ்வரி, விமலரமணி, செல்வகுமரன், தயாளினி, தாட்சாயிணி ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலச்சந்திரனின் அன்பு மாமனும் அரவிந்தன், சகானா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணராஜா, நவரட்ணராஜா, சற்குணராஜா மற்றும் சபாரட்ணம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2008) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

லக்கி கிறீம் ஹவுஸ்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (70433) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் விடயத்தில் புஷ் நிர்வாகத்தால் 935 போலி அறிக்கைகள் தயாரிப்பு

நியூயோர்க், ஜன.24

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு ஈராக் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது எனக் காரணங்காட்டி ஜனாதிபதி புஷ்ஷும் அவரது உயர்மட்ட அதிகாரிகளும் உண்மைக்குப் புறம்பான - போலியான 935 அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாறு ஆதாயத்தை நோக்காகக் கொள்ளாத இருபெரும் அமெரிக்கப் பத்திரிகை நிறுவனங்கள் தம் கூட்டு ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன.

2001ஆம் வருட செப்டெம்பர் 11ஆம் திகதி பயங்கரவாதிகள் அமெரிக்காவில் தாக்குதல்கள் நடத்தினார்கள். அதற்குப் பின்னர் இரு வருடங்களாக ஈராக் தொடர்பாக வெளிவந்த புஷ் நிர்வாகத்தின் அறிக்கைகளே போலியானவை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்தப் போலி அறிக்கைகள் வெளியீடு பொதுமக்களின் அபிப்பிராயத்தை தம்பால் ஈர்ப்பதற்காக கூட்டாக மேற்கொள்ளப்பட்ட ஒரு பிரசார நடவடிக்கையாகும். இதைவிட இவ்விடயத்தில் எதுவித உண்மையும் கிடையாது என்றும் இவ்விரு அமைப்புகளும் ஆய்வறிக்கையில் புஷ் நிர்வாகத்தின் குட்டை போட்டு உடைந்துள்ளன.

'போலிக் காரணங்களைக் காட்டி நாட்டை யுத்தத்துக்கு இட்டுச் செல்வததற்கான ஒரு நடவடிக்கையே இந்த அறிக்கைகள் வெளியீடாகும்.' என்றும் மேலும் இந்நிறுவனங்கள் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளன.

இருவருட காலத்துக்குள் 935 தவறான-போலியான அறிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இந்த போலி வியாக்கியானங்கள், அவர்களின் உரைகள், செய்தி விளக்கங்கள், பேட்டிகள், இதர அம்சங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இந்நிறுவனங்கள் விளக்கியுள்ளன.



பேரழிவுகளுக்கான ஆயுதங்கள் ஈராக்கிடமுண்டு. இல்லையேல் அவற்றை உற்பத்தி செய்ய அது முயல்கிறது. அது அத்தகைய ஆயுதங்களை வழங்குகிறது. இல்லையேல் அல் - குவைதாவுடன் அது தொடர் கொண்டுள்ளது. அப்படியில்லாவிட்டால் அது அல் - குவைதாவுடன் தொடர்பு கொண்டுள்ளதோடு அதற்கு ஆயுதங்களும் வழங்கி வருகிறதென புஷ்ஷும் அவரது நிர்வாக அதிகாரிகளும் குறைந்தபட்சம் 532 தடவைகள் பறைசாற்றி வந்துள்ளார்கள் என்றும் இந்நிறுவனங்கள் ஆய்வு அறிக்கையில் எடுத்துரைத்துள்ளன.

''புஷ் 259 போலி அறிக்கைகளை விடுத்துள்ளார். இவற்றில் 231 ஈராக்கில் பேரழிவுக்கான ஆயுதங்கள் இருக்கின்றனவென விடுக்கப்பட்டவை. மீதி 28 அறிக்கைகளும் ஈராக் அல் - குவைதாவுடன் இறுக்கமான தொடர்புகளை கொண்டுள்ளது என சுட்டிக்காட்டுவதற்காக விடுக்கப்பட்டவை. போலி அறிக்கை விடுத்தவர்களில் புஷ்ஷுக்கு அடுத்த படியாக இரண்டாவது ஸ்தானத்தல் இருப்பவர் கொலின் பவல் ஆவார்.'' - என்றும் ஆய்வறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

ஈராக்கில் பேரழிவுகளுக்கான ஆயுதங்கள் இருக்கின்றனவென சுட்டிக்காட்டி கொலின் பவலால் 244 போலி அறிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. ஈராக்கிற்கும் அல் - குவைதாவுக்கும் அன்னியோன்ய தொடர்பு உண்டெனக் குறிப்பிட்டு இவரால் 10 போலி அறிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன வென்றும் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## காஸா மீதான தடையை இஸ்ரேல் நீக்கியது

காஸா, ஜன.24

சர்வதேச சமூகத்தின் கடும் அழுத்தத்தைத் தொடர்ந்து பலஸ்தீனப் பகுதி மீதான ஐந்து நாள் பொருளாதாரத் தடையைத் தளர்த்தியுள்ள இஸ்ரேல், காஸாவிற்கு எரிபொருள்களையும் வழங்கியுள்ளது.

மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்ட காஸாவின் புகைப்படங்கள் சர்வதேச சமூகத்தினரின் கவனத்தை ஈர்த்ததுடன் இஸ்ரேலை, தடையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொண்டன.

புஷ் நிர்வாகம் மனிதாபிமான நெருக்கடி உருவாவதைத் தடுப்பதற்கான அவசியம் குறித்து இஸ்ரேலுடன் பேச்சு மேற்கொண்டுள்ளது. சுகாதார சேவைகள் பாதிப்படைவதைத் தடுப்பதற்காக எரிபொருள் தடையை நீக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் கேட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே இஸ்ரேல் எரிபொருட்களை அனுப்பியுள்ளது. இதனைத் தொடர்ந்து இரண்டு நாட்களின் பின்னர் காஸா நகரின் அனேக பகுதிகளுக்கு மின்சாரம் திரும்பியுள்ளது.

காஸாவிற்கு 60,000 கலன் டீசல் வழங்கப்படும். எனினும், ஏனைய பொருட்கள் தற்போதைக்கு வழங்கப்படமாட்டாதெனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்த இரு நாட்களும் காஸா மருத்துவமனைகள் மின்பிறப்பாக்கியின் உதவியுடன் இயங்கியுள்ளன. அரசியல் மோதல்களுக்காக எரிபொருட்கள் பயன்படுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## இந்திய வம்சாவளியினரை விடுதலை செய்யுங்கள்
### ஐந்து வயதுச் சிறுமி மலேஷியப் பிரதமருக்கு கடிதம்

கோலாலம்பூர், ஜன.24

மலேஷியாவில் உள்நாட்டு பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐந்து இந்திய வம்சாவளித் தலைவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என ஹிண்ட்ராப் அமைப்பின் தலைவர் வைத்தியமூர்த்தியின் ஐந்து வயது மகள், அந்நாட்டுப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மலேஷியாவில் சம உரிமை கேட்டு இந்திய வம்சாவளியினர் கடந்த நவம்பர் 25ஆம் தேதி, பிரமாண்ட பேரணி நடத்தினர். அதனை அடக்குமுறையைக் கையாண்டு, பொலிஸார் அடக்கினர். இது சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்தது, இந்து உரிமைகள் நடவடிக்கைக் குழு எனும் ஹிண்ட்ராப் அமைப்புத்தான். இதன் தலைவர் வைத்திய மூர்த்தி, மலேஷியாவில் இருந்து உடனடியாக வெளியேறி தற்போது லண்டனில் தங்கியுள்ளார். ஆனால், மற்றைய முன்னணி தலைவர்களாக வைத்தியமூர்த்தியின் சகோதரர் உதயகுமார், மற்றும் கணபதிராவ், வசந்தகுமார், கங்காதரன், மனோகரன் ஆகியோர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால், விசாரணையின்றி இரண்டு ஆண்டுகள் வரை சிறையில் வைத்து இருக்க முடியும். எனவே, கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடப்பட்டு வருகிறது.

இவர்களின் விடுதலையை வலியுறுத்தி வைத்திய மூர்த்தியின் ஐந்து வயது மகள் வைஷ்ணவதேவி, மலேஷியப் பிரதமர் படாவிக்கு மூன்று பக்கங்களில் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தை படாவியின் தனி உதவியாளரிடம் வைஷ்ணவதேவி ஒப்படைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:- நமது நாட்டில் உள்ள இந்தியர்கள், மற்றும் உங்களால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐந்து பேரின் உரிமைக்காக இக்கடிதத்தை எழுதியுள்ளேன். அந்த ஐந்து பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். நானும், இன்னும் சில குழந்தைகளும் பெப்ரவரி 16ஆம் திகதி உங்களை( பிரதமர் படாவி) சந்திக்க வருகிறோம். நாங்கள் தரும் சிவப்பு மற்றும் மஞ்சள் நிற ரோஜாக்களை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது எனக்கு வருத்தத்தைத் தரும். உங்களைச் சந்திக்க வரும் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது.

## ஆப்கான் எல்லையிலுள்ள தலிபான்களை அழித்தொழிப்பதே தற்போதைய தேவை
### ஒஸாமாவைத் தேடுவது முக்கியமல்ல என்கிறார் முஷாரப்

பரிஸ், ஜன.24

அல் - குவைதா அமைப்பின் தலைவர்களான ஒஸாமா பின்லேடன், அய்மன் - அல் - ஜவாஹிரி போன்றவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபடவில்லையெனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப், ஆப்கான் எல்லையிலுள்ள தலிபான் இயக்கத்தினரை அழிப்பதே முக்கியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அல் - குவைதா தலைவர்கள் இன்னமும் தலைமறைவாக இருப்பதனால் பெரிய பாதிப்பு எதுவுமில்லை. பாகிஸ்தானின் மேற்குப் பகுதியில் செயற்படும் தலிபான் ஆதரவுத் தீவிரவாதிகளை விட இவர்கள் ஆபத்தில்லாதவர்கள் என முஷாரப் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பியச்சுற்றுப்பயணத்தின்போது பிரான்ஸின் வெளிவிவகார உறவுகளுக்கான நிலையத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே முஷாரப் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

பாகிஸ்தான் நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ள 1,00,000 படையினர் ஒஸாமாவையும் ஜவஹிரியையும் தேடும் முயற்சியை மேற்கொள்ளவில்லை. மாறாக அவர்கள் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதன்போது இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என முஷாரப் குறிப்பிட்டுள்ளார்.



பிரான்ஸுக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோசி பர்கோசி கைலாகு கொடுத்து வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் 1000 சோதனைச்சாவடிகளை அமைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கப் புலனாய்வுத் துறை வழங்கும் ஒத்துழைப்பையும் அவர் பாராட்டியுள்ளார்.

## உலக அரங்கில்

## துண்டுகள், ஆயுதங்களால் யாருக்கும் நன்மையில்லை
### பின்லேடன் மகன் பேட்டி

வாஷிங்டன், ஜன.24

துண்டுகள், ஆயுதங்கள் எவையும் யாருக்கும் நன்மை அளிக்கப்போவது கிடையா எனக் கூறியுள்ள பின்லேடனின் மகன் ஒமர், பின்லேடன் சமாதான வழிக்குத் திரும்பவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது தந்தைக்கு அருகில் இருக்கும் முஸ்லிம் மதகுருமார்கள் தான் அவரை தவறாக வழிநடத்துகிறார்கள் என்றும் ஒமர் குறிப்பிட்டிருக்கிறார்.

''என் தந்தை தீவிரவாதியல்லர். அவரை அப்படி கூறுவது சரியில்லை. ரஷ்யாவை எதிர்த்து அவர் யுத்தம் செய்தபோது அமெரிக்கா அவரை தீவிரவாதியாக கருதவில்லை. ஒரு நாயகனாகத்தான் கருதியது. அப்போது அவர்கள் அதை யுத்தம் என்றார்கள். இப்போது அவர்கள் இதைத் தீவிரவாதம் என்கிறார்கள். என் தந்தை முஸ்லிம்களை அவர்கள் மீதான தாக்குதல்களில் இருந்து காப்பாற்றுவதைத் தன் கடமை எனக் கருதுகிறார். அவரை தீவிரவாதியாக நானும் பார்க்கவில்லை. அவர் அன்பானவர்.'' - இவ்வாறு ஒமர் கூறினார்.

## தனிமையைப் போக்குகிறது கடவுள் பக்தி
### அமெரிக்க நிபுணர்கள் கருத்து

நியூயோர்க், ஜன.24

கடவுள் பக்தியை அதிகம் கொண்டிருப்பது தனிமையைப் போக்குவதற்கு உதவுகின்றது என அமெரிக்க மனோதத்துவ நிபுணர்களின் ஆராய்ச்சி ஒன்றில் உறுதி செய்யப்பட்டது.

சிகாக்கோ பல்கலைக் கழக மனோதத்துவ ஆராய்ச்சி பேராசிரியர் நிக்கோலஸ் எப்லே தலைமையில், தனிமையை விரட்டும் சில விடயங்களை நிபுணர்கள் கண்டுபிடித்தனர். ஆய்வின் முடிவில் தனது அறிக்கையில், நிக்கோலஸ் எப்லே கூறியவை வருமாறு:-

ஒருவருக்கு தனிமை மிகவும் மோசமானது; அதை போக்கிக் கொள்ள பல வழிகளையும் நாடுகிறார். அவர் அணுகும், பழகும், விரும்பும் பொருள்கள், பிராணிகள் ஆகியவற்றை, தன்னுடன் பழகும் , பாசத்தை கொட்டும் மனித இனமாகத்தான் கருதுகிறார். அப்போது தான் அவரது தனிமை விலகுகிறது.

தனிமையில் இருக்கும் சிலருக்கு, நாய்கள் வளர்க்கப் பிடிக்கும்; அவற்றுடன் தன் குடும்பத்து உறுப்பினர்கள் போல பழகுவார். அவற்றுக்கு ஏதாவது உடல்கோளாறு வந்தாலும், துடித்துப் போய்விடுவார். டாக்டரிடம் அழைத்துச் சென்று காட்டுவார். அவற்றுக்கு உடல் நிலை சரியாகும்வரை, இவர் சாப்பிடாமல் இருப்பார்.

சிலருக்கு கடவுள் பக்திதான், அவர்களின் தனிமையைப் போக்கும் அருமருந்தாக இருக்கும். தான் ஒன்றிப்போகும் கடவுளை, அவர் தன்னுடன் வசிப்பவர் போல நினைப்பார். அவருக்கு உணவு படைத்து, அவர் சாப்பிடுவது போலக் கூட நம்புவார். அவரின் இந்த நம்பிக்கையை யாரும் சிதைக்க முடியாது. அதனால்தான், கடவுள் பக்தி உள்ளவர்கள், எதற்கும் பயப்படுவதில்லை; தனிமையில் இருப்பது போன்று உணர்வதே இல்லை. தனிமையைப் போக்குவதற்கு அதுவே மிகச் சிறந்த மார்க்கம்.

கணினி விளையாட்டு, இணையத்தளம், கையடக்கத் தொலைபேசி போன்ற பல டிஜிட்டல் சமாச்சாரங்களும் ஒருவரின் தனிமையை போக்கும் நண்பனாக இருக்கின்றன. இவற்றில், பிடித்தமான ஒன்றுடன் அவர்கள் சாப்பிடாமல், உறங்காமல், நேரம் போவதே தெரியாமல் பொழுதைக் கழிப்பர். தனிமை என்பது வலிமிக்கது. கிட்டத்தட்ட இறந்த மனிதன் போலத்தான் அந்த நிலைமை. அதில் இருந்து மீள்வது சவாலான விடயம். சிகரெட் போன்ற பழக்கங்களுக்கு ஆளாவதும் இதனால்தான்.

- இவ்வாறு அமெரிக்க நிபுணர்களின் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாக். தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு

புருசெல்ஸ், ஜன. 24

பாகிஸ்தானில் எதிர்வரும் பெப்ரவரி 18ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்கப் பார்வையாளர்கள் குழுவை அனுப்ப ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்துள்ளன.

இத்தகவலை ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு விவகாரப் பிரிவுத் தலைவர் ஜாவியர் சோலானா கூறியுள்ளார். இதுகுறித்து ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பிடம் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

''தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடந்தால்தான் எதிர்காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் உதவிகள் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் என்றும் முஷாரப்பிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அங்கு மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஆட்சி அமைய வேண்டும். சட்டப்படி ஆட்சி நடத்தப்பட வேண்டும்.'' - என்றார் சோலானா.

ஐரோப்பியப் பார்வையாளர்கள் தங்கு தடையின்றி பாகிஸ்தானின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் சென்று தேர்தலைக் கண்காணிக்கலாம். சுதந்திரமாகத் தங்கள் கருத்துகளைச் சொல்ல அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களிடம் முஷாரப் உறுதியளித்தார். தேர்தலில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூயிஸ் ஆர்பருக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.24

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான கவுன்ஸிலின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பரின் கருத்துகளைக் கண்டித்து கொழும்பில் உள்ள ஐ.நா. தூதரகத்திற்கு முன்பாக நேற்று ஜே.வி.பி. கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்குபற்றிய இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 30 நிமிட நேரம் நடைபெற்றது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை அரசு வெளியேறியதற்கு எதிராக லூயிஸ் ஆர்பர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்த கருத்துகளைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் லூயிஸ் ஆர்பருக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியதுடன் கண்டனப் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

'ஏகாதிபத்திய ஆர்பரே இலங்கை விடயத்தில் தலையிடாதே', 'கனடாவில் ஒளிந்திருக்கும் புலிகளைக் கைதுசெய்', 'இலங்கைக்கான உனது மனிதாபிமான உதவிகள் எமக்கு வேண்டாம். அதனை நீரே வைத்துக்கொள்ளும்' போன்ற பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தி நின்றனர். (சி)

## கிழக்கு உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்பதால் நாம் அத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித் துள்ளோம்.

மட்டக்களப்பில் வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு இந்தத் தேர்தலில் ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் அதி கரித்துள்ளன. எந்தக் கட்சியின் வேட்பாளர்களும் துணிந்து தேர்தல் களத்தில் குதிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**பாதுகாப்பு வழங்க அரசு தயாரில்லை**

எந்த வேட்பாளருக்கும் போதியளவு பாது காப்பை வழங்க அரசு தயாராக இல்லை. ஆனால், கிழக்கு புலிகளிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்கான சாதக நிலை அங்கிருப்ப தாகவும் அரசு கருதுகிறது.

அரச படையினரின் உதவியுடன் அவர்கள் கண்முன்னேயே ஆயுதக்குழுக்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றபோது அரசோ அங்கு தேர்தலுக்கான சாதகமான நிலை உள்ளதாகக் கூறுகிறது.

ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை விடவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கே ஆயுதக் குழுக்களால் அதிக உயிராபத்துள்ளது. கூட்டமைப்பு களத்தில் இறங்கி தேர்தல் பிரசாரத்தில் அறவே ஈடுபட முடியாது. அதற்கான பாதுகாப்பு எமக்கு இல்லை.

ஏற்கனவே இவ்வாறான அச்சுறுத்தல் கள் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு எம்.பிக்கள் மட்டக்களப்பிற் குப் போகமுடியாமல் கொழும்பிலேயே தங்கியிருக்கின்றனர்.

எல்லாவற்றையும் கருத்தில் எடுத்துப் பார்க்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் ஈடுபடுவதற்கான சூழல் அறவேயில்லை. இதன் காரணமாகவே இத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று நாம் தீர்மானித்துள்ளோம்.

இந்தத் தேர்தலில் கிழக்குத் தமிழ் மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என் பது தொடர்பான எமது கூட்டமைப்பின் நிலைப்பாடு மக்களுக்கு விரைவில் விரிவாக விளக்கப்படும். இதற்கான விரிவான அறிக்கை விரைவில் வெளியிடப்படும் - என்றார் அவர்.(சி)

## பொய்யான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிக்கப்பட்டுள்ளது என ஒரு பெரும் பரப்புரையை மக்களைக் குழப்பும் வகையில் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் தகவல் அப்பட்டமான பொய்யாகும். அதில் எந்தவித உண்மையும் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைமை அழிந்தது என்று முன்னர் 1989ஆம் ஆண்டிலும், 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலையின் போதும் மக்களைக் குழப்பும் வகையில் பெரும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. அது பொய் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இலங்கை அரசு இத்தகைய மலிவுப் பரப்புரையில் தீவிரம் காட்டி வருகிறது. எம்மைப் பொறுத்தவரை இது இலங்கை அரசுகளுக்கு ஏற்படும் ஒரு நோயாகவே இதனை நாம் பார்க்கின்றோம் - எனக் கூறியுள்ளார். (சி)


**துளிர்கள் நிறுவனத்தின் உளசமூக கற்கை நெறி**

**டிப்ளோமா சான்றிதழ்**

பயிற்சிப் பிரிவு :- 05.
பயிற்சிக் காலம் :- 12 மாதங்கள்.
தகைமை :- G.C.E O/L, சமூக சேவையில் ஈடுபாடு.
விரிவுரைகள் :- சனி, ஞாயிறு, போயா தினங்கள்.

ஆர்வமுள்ள இருபாலரும் 02/02/2008 முன்பு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.
அரச ஊழியர்களும், ஆசிரியர்களும் இக் கற்கை நெறியைத் தொடரலாம். வயது உங்களுக்கு ஒரு பிரச்சினையல்ல.

இல. 47, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குனர்,
துளிர்கள்.



**Microsoft Certified Systems Engineer**

We are now Launch on Windows Vista

யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.01.2008 07 a.m.

★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள் விபரங்கள் நேரில்

MGS Supported by UNDP/JRRP

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்


## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்ட்ரூ விஜேசூரிய மேலும் கூறினார்.

இலங்கை விமானப்படையின் இந்த அறிவிப்பு நேற்று முற்பகல் கொழும்பில் உள்ள செய்தி நிறுவனங்களை ஓர் உலுப்பு உலுப்பியது. (சி)

## ராஜதந்திரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்கால அறிக்கை குறித்து ராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளிப்பார்.

இச்சந்திப்புக்கு முன்னதாக அமைச்சர் ஊடகவியலாளர்களைச் சந்தித்து இடைக்கால யோசனைகள் குறித்து விவரிப்பார். (அ-1)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட நேரம் இந்தப் பதைபதைப்பும், பதற்றமும் நீடித்தன.

இரணைமடுவை அண்டிய காட்டுப் பகுதிக்குள் விமானங்கள் குண்டுமாரி பொழிந்த பின்னர் கிளிநொச்சி வான் பரப்பிலிருந்து அகன்றன. அதனை அடுத்தே நகரில் பதற்றம் நீங்கியது.

வழமைக்கு மாறாக நீண்ட நேரம் விமானங்கள் வானில் வட்டமிட்டுக் கிலியை ஏற்படுத்தியமையால் பதற்றம் நீங்கிய பின்னரும் நகரில் வழமை நிலை திரும்பவில்லை.

பாடசாலைகள் விமானம் வட்டமிட்டகையோடு செயல் இழந்தன.கடைகள் இழுத்து மூடப்பட்டன. வெறிச்சோடிய நகருக்கு மக்கள் நண்பகலுக்குப் பின்னரும் திரும்பவில்லை.

விமானம் வட்டமிட்ட சமயம் ஏற்பட்ட பீதியை அடுத்து நகர் செயலிழந்ததால் பிற்பகலில் நகரத்தில் ஹர்த்தால் போன்ற சூழ்நிலை காணப்பட்டது. (சி)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்தவுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையானுக்கும் இடையில் நேற்று மாலை நடந்த சந்திப்பில் கூட்டாக போட்டியிடும் முடிவு எடுக்கப்பட்டதாக அக்கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஸ்ரீலங்க முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தலா 5 சபைகளுக்கு நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன . 12 சுயேச்சைக் குழுக்களும் நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (அ-1)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடக்குமா என்பது குறித்து எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு பகுதியினர் ஆயுதங்களை வைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டு மற்றக் கட்சிகளை அச்சுறுத்துவதன் மூலம் இங்கு சுமுகமான தேர்தல் நடக்கும் என்று அமெரிக்கா நினைக்கவில்லை.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் உட்பட சகல அமைப்புகளும் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஆதரவைப் பெற்று பிரதிநிதிகளாக வரவேண்டுமே தவிர ஆயுதங்கள் மூலம் வரக்கூடாது என்பதே அமெரிக்காவின் கருத்தாகும் - என்றார். (சி)


55, Arasady Rd, Jaffna.
26.01.2008
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN AutoCAD
தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்



**அரசியல்**
MODEL EXAM
படிக்கட்டு
STEP TO THE VICTORY
தொடர் பரீட்சைகள் ஆரம்பம்:- 27.01.2008
By:- K. SUGASH



THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE JAFFNA
பொதுவான வகுப்பு
தொழிற்படும் தாவரம்
ஆரம்பம்-24.01.2008
செவ்வாய், வியாழன்
4.30-5.45 pm


## இடைக்காலத் தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* இப்போதுள்ள அரச கரும மொழிக் கொள்கையை முழுமையாக நடைமுறைக் குக் கொண்டுவருதல்.
* கிழக்கு மாகாண சபைக்குத் தேர் தலை நடத்துதல்.
* வடக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைத்தல் (அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் ஈ.பி.டி. பி. மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் அடங்கிய சபை இயங்கும்)
* ஏனைய மாகாண சபைகளில் நடை முறையில் உள்ளது போலவே, வடக்கு மற் றும் கிழக்கு மாகாண சபைகளின் பொலிஸ் அதிகாரங்கள் ஜனாதிபதி வசமே இருக் கும்.

ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்ட அறிக்கையில் மேற்படி அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், சட்ட ஒழுங்குகளைப் பேணும் பொலிஸ் துறையினரின் அதிகாரங்கள் குறித்தும் அவர்களது நடைமுறைகள் குறித் தும் இதில் விளக்கமளிக்கப்படவில்லை.

இந்த இடைக்காலத் தீர்வுத்திட்ட அறிக்கை நேற்றிரவு அமைச்சரவையின் பரிசீலனைக்கு ஜனாதிபதியினால் சமர்ப் பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தீர்வுத்திட்ட அறிக்கையினைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அங்கு கலந்து கொண்டிருந்த அரசியல் கட்சித் தலைவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அங்கு அவர் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை எனக்குக் கிடைத்துள்ளது.

அதன்படி அதற்குத் தேவையான நட வடிக்கைகளை தற்போதுள்ள அரசமைப்புக்கு அமைந்த வகையில் விரைவாக எடுப்பதற்கு ஆவன செய்யப்படும். இது எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் தீர்வுக்கு உதவும் என நான் நம்புகிறேன்.

பயங்கரவாதத்தை நாம் அனைவரும் நிராகரிக்கும் அதே வேளை, நாம் ஏற்க னவே கூறியது போல சகல நடவடிக் கைகளும் எடுக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்குத் தேவையான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் முனைப் புடன் செயல்பட்டு வருகிறோம் - என்றார். (சி)

## ஐக்கிய தேசியக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியவை வருமாறு:-

கிழக்கில் ஆயுதக்குழுக்கள் பல செயற்பட்டு வருகின்றன. தேர்தல் காலத்தில் இக்குழுக்களின் வன்முறை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இக்குழுக்கள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன.

**உயிர்ப் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை**

இந்த நிலையில் வேட்பாளர்களின் உயிர்களுக்கு எந்தப் பாதுகாப்பு உத்தரவாதமும் கிடையாது. வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதிக்கப் பயப்படுகின்றனர்.

உண்மையில் அரசுதான் இந்த நிலைமைக்கு முழுக்காரணம். வரலாற்றிலேயே மிக மோசமான தேர்தல் என்று சொன்னால் இது தான். எந்தத் தேர்தலிலும் இதுவரை விரும்பிய கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போன்றவை போட்டியிடக் கூடிய சூழல் இருந்தது. ஆனால், இந்தத் தேர்தலில் அவ்வாறான சூழல் எதுவும் கிடையாது.

இந்த ஆயுதக்குழுக்களின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களைத் தவிர எவரும் அங்கு போட்டியிட முடியாத நிலையே தோன்றியுள்ளது. இந்தச் சூழ்நிலையின் மத்தியில், எமது கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தினால் நிச்சயம் அவர்களுக்கும் உயிர் ஆபத்து ஏற்படும்.

ஆகவேதான் இதுவொரு மோசடிகள் மற்றும் வன்முறைகள் நிறைந்த தேர்தல் என்று பிரகடனப்படுத்தி இத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித் திருக்கிறோம். - என்றார் அவர். (சி)


**SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2008**
ஆரம்பம் 26,28.01.2008

Special Offer 3000/=

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 3000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | 3 Months |

Softview Computer College
55, Arasady Road, Jaffna.



**B.A, Bcom, BBA, BBE Bsc (MATHS)**
**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

★ பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
★ பதிவுகள் முடிவு திகதி:-29.02.2008

குறிப்பு:-1) A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2) B.A இல் வரலாறு, அரசியல், தமிழ், ஆங்கிலம், SOCIAL SCIENCE, பொருளியல் ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யமுடியும்.
3) BACHELOR OF COMPUTER APPLICATION என்னும் பட்ட நெறிக்கும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

யாழ். இணைப்பாளர்கள்,
காமராசர் பல்கலைக்கழகம்(மதுரை).
TP:- 222 8148, 222 3208.

புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org